
# நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



சிறந்ததோர் தொண்டினாலே சிறப்புறும் அனுமன் பின்னால்
பிறந்திடத் தவஞ்செய் மூவர், பிராட்டிஎன் றிவர்கள் சூழ
நிறைந்திடும் கருணைச் செல்வன் நெஞ்செனும் அரியணை மேல்
அறந்தலை நிறுத்த வந்தான் அவனடி வணங்கி வாழ்வாம்.

ஜுலை 1989

உ
சிவமயம்

# நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 8
ஒலி 6

சுக்ல
ஆனி

ஜூலை
1989

இம்மையை மறுமை தன்னை எமக்குவீ டாகி நின்ற
மெய்ம்மையை விரிந்த சோலை வியன்திரு வரங்கம் மேய
செம்மையைக் கருமை தன்னைத் திருமலை யொருமையானைத்
தன்மையை நினைவார் என்றன் தலைமிசை மன்னு வாரே.

திருமங்கையாழ்வார்—திருக்குறுந்தாண்டகம்.

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம்:
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001.


தொலைபேசி: p. p. 26668

தனி இதழ் ரூ. 2-00 ஆண்டுச் சந்தா ரூ. 24-00

## செட்டி நாட்டரசர் இல்லத் திருமணம்

கானாடுகாத்தான் சா. ராம. மு. அ. முத்தையா செட்டியார் அவர்கள் பேரனும் குமாரராஜா மு. அ. மு. முத்தையா செட்டியார் அவர்களது சுவீகாரப் புதல்வனுமான திருவளர் செல்வன் அண்ணாமலை B. E., M. S. க்கும் இராயவரம் மு. அ. மு. பழநியப்ப செட்டியார் அவர்கள் பேத்தியும் மு. அ. மு. பழ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் புதல்வியுமான திருவளர் செல்வி கண்ணம்மை B. A. (Final) க்கும் 7-6-1989 புதன் கிழமை காலையில் இராயவரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்திற்கு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் முன்னாள் தமிழக அமைச்சர்கள் திரு. க. ராஜாராம், திரு. திருநாவுக்கரசு, திரு. அன்பில் தர்மலிங்கம் உத்தரப் பிரதேச மாநில முன்னாள் ஆளுநர் திரு. கோபால் ரெட்டி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் திரு. ஆர். எம். சேதுநாராயணன், முன்னாள் துணை வேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு பின்னணிப் பாடகர் சீர்காழி திரு. சிவ. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், அலுவலர்கள் செட்டிநாடு சிமெண்ட்ஸ், சௌத் இந்தியா கார்ப்பரேஷன் நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள், தொழிலாளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், கணக்காய்வாளர்கள், உயர்தர காவல் துறை அதிகாரிகள்



தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பிறந்த நாளன்று (3-6-89) மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் முன்னாள் தக்காரும் நமது இதழின் ஆசிரியருமான வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் முதல்வருக்குப் பொன்னாடை அணிவித்து முதலமைச்சர் நிவாரண நிதிக்கு நிதி வழங்கிய போது எடுத்த படம்.

---

தொழிலதிபர்கள், வணிகர்கள் அரசு அதிகாரிகள் அலுவலர்கள் நண்பர்கள் நகரத்தார் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆயிரக்கணக்கில் வந்து கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அன்று மாலை கானாடுகாத்தானில் நடைபெற்ற பெண்ணழைப்பு நிகழ்ச்சியல் காவல் துறையைச் சேர்ந்த டி. ஐ. ஜி. திரு. செல்வராஜ் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். தென்னரசு திரு. கூத்தகுடி சண்முகம் திரு. ப. நெடுமாறன் காரைக்குடி திரு. இராம. சுப்பையா திரைப்பட இயக்குநர் திரு. எஸ்பி. முத்துராமன், திரைப்படத் தயாரிப்பாளர் திரு. பழ. கருப்பையா மற்றும் ஏராளமானபேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இத்திருமணத்தை முன்னிட்டு கானாடுகாத்தானில் 2-6-89 அன்று சாத்தப்ப செட்டியார் படைப்பும் 3-6-89 அன்று கம்பிசேலைப் படைப்பும் 4-6-89 அன்று பெரிய படைப்பும் நடைபெற்றன.

திருமணத்திற்கு முதல் நாள் கானாடுகாத்தானில் சீர்காழி திரு. சிவ. சிதம்பரம் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

இத்திருமணத்தை முன்னிட்டு 16-6-89 அன்று சென்னை ராஜா அண்ணாமலைபுரத்திலுள்ள செட்டிநாடு அரண்மனையில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது கவிஞர் திரு. சுப்பு ஆறுமுகம் குழுவினரின் 'மீனாட்சி கல்யாணம்' வில்லுப் பாட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

# முனைவர் பட்டம் பெற்ற வ. தேனப்பன்

துணைப் பேராசிரியர்- எழுத்தாளர்- நூல் வெளியீட்டாளர்- மேடைப் பேச்சாளர்- போன்ற பல தகுதிகளையுடைய திரு. வ. தேனப்பன், 'ஒன்பது நகரக் கோயில்கள்' எனும் தலைப்பில் ஆய்வு செய்து அளித்த கட்டுரைக்கு மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் 'Ph. D.' எனும் முனைவர் பட்டத்தினை 27-5-89 அன்று வழங்கிச் சிறப்பித்துள்ளது. அதற்காக திரு. வ. தேனப்பனுக்கு நமது மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. வ. தேனப்பன் பி. அழகாபுரியைச் சேர்ந்தவர். 39 வயது இளைஞர். மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியில் B. Sc (Zoology) மற்றும் M A (தமிழ்) கற்றுத் தேர்ந்தவர். இவர் 1976 முதல் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரியில் தமிழ்த் துணைப் பேராசிரியராக நற்பணியாற்றி வருகிறார்.


இவர் தன்னை ஓர் எழுத்தாளர் என்று கூறிக் கொள்வதில் பெருமை கொள்கிறார். இவரை எழுத்தாளராக்கியது திருப்பராய்த்துறை ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுலமாகும்.

இவர் 600 சிறுகதைகள், 200 கவிதைகள், 6 நாவல்கள், 5 குறு நாவல்கள், 12 ஆய்வுக் கட்டுரைகளைப் படைத்திருக்கிறார் நகைச்சுவை இவருடைய தனிச் சிறப்பாகும். "அயல் மகரந்தங்கள்" என்ற இவருடைய சிறுகதை மதுரைக் காமராசர் பல்கலைக் கழக B. A. B Sc B. Music மாணவர்களுக்கு சிறுகதைப் பாடநூலாக உள்ளது. இவர் எழுதிய "துப்பறியும் சிங்காரம்" என்ற நாடகம் ஏவி. எம். அறக் கட்டளையின் தங்கப் பதக்கத்தையும் "கணிப் பொறியின் கதை" வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளது.

ஈரமான ரோஜாக்கள், கனவு அன்னங்கள், இரயில் சிநேகங்கள், தவளைத் திருமணம், நன்னம்பிக்கை முனை போன்றவை இவரது படைப்புக்களில் சில வாகும்.

இவரது படைப்புக்களைப் பற்றி ஆய்வு செய்து இதுவரை நான்கு பேர் M. Phill பட்டம் பெற்றுள்ளனர் என்பதிலிருந்தே இவரது பெருமையை அறியலாம்.

இவர் ஆய்வு அரங்கம், கருத்தரங்கம், கவியரங்கம், பட்டி மன்றம், வழக்காடு மன்றம்



என்று பல நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறார்.

இவர் 'நகரத்தார் வளர்த்த சிற்பக்கலை' எனும் தலைப்பில் ஓர் குறுகிய கால ஆய்வுக் கட்டுரையை தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அளித்திருக்கிறார்.

இவரது, துணைவியார் திருமதி தேன்வள்ளியம்மை சிறந்த வாழ்க்கைத் துணைவி மட்டுமல்ல; கணவருக்கு உதவியாக அச்சுத் தொழில் தொடர்புள்ள பல நிறுவனங்களை நிர்வகித்து வரும் சிறந்த நிர்வாகியுமாவார்.

- எல். சுந்தரம்

# எனது வெளிநாட்டு அனுபவங்கள்

வி.என்.சிதம்பரம்




— 42 —

லாஸ்ஏஞ்சல்சில் திரு. சுப்பு அவர்களிடமும் திருமதி சுப்பு அவர்களிடமும் விடை பெற்றுக் கொண்டு மீண்டும் ஒருமுறை சான்பிரான்சிஸ்கோவிற்கு வந்தேன்.

இந்தக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும்போது சுப்புவின் தந்தையார் திரு. எஸ். ஆர் எம். எஸ். நாராயணன் செட்டியாரின் மணிவிழா அழைப்பிதழ் கிடைக்கப் பெற்று காரைக்குடி சென்று வந்தேன். மணிவிழாவும் மிகச் சிறப்பாக நடந்தது. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு அங்கு திரு, சுப்பு அவர்களையும் திருமதி சுப்பு அவர்களையும் சந்தித்து உரையாடியதில் பெரு மகிழ்ச்சி அடைந்தேன். லாஸ்ஏஞ்சல்சில் அவர்கள் இல்லத்தில் இருந்தது, நகர்களைச் சுற்றிப் பார்த்தது எல்லாம் என் நினைவிற்கு வந்து பெரு மகிழ்ச்சியைத் தந்தன. சுப்பு அவர்கள் உருவத்திலும், குணத்திலும் மாறுமல் அப்படி-யே இருந்தார்கள்.

திரு. குமார் சான்பிரான்சிஸ்கோ ஏர்போர்ட்டிற்கு வந்து என்னை அழைத்துச் சென்ருர். ஏதாவது கோவிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்து கொள்ள வேண்டுமென்று எனக்கு ஆசையாக இருந்தது. ''இங்கு ஏதேனும் நமது கோவில்



அமெரிக்க நாட்டில் சான்பிரான்சிஸ்கோ நகரில் உள்ள பிள்ளையார் கோவிலில் அமெரிக்க சுவாமிகளுடன் வி.என். சிதம்பரம் செட்டியார் அவர்கள்.

---

இருக்கிறதா?'' என்று திரு. குமாரிடம் கேட்டேன். அவரும் ''இங்கு ஒரு பிள்ளையார் கோவில் இருக்கிறது, போய் வரலாம்'' என்று சொன்னார். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அந்தப் பிள்ளையார் கோவிலை ஒரு அமெரிக்கரே கட்டியிருக்கிறார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் ஆச்சரியமாக இருந்தது. பிள்ளையார் கோவிலுக்குப் போய்ச் சேர்ந்தோம். பல அமெரிக்கர்களும், சில இந்தியர்களும் அங்கு வழிபாடு செய்து கொண்டிருந்தனர். நான் வழிபடும் முழுமுதற் கடவுளான விநாயகப் பெருமானை மனதார வணங்கினேன். அதுவும் பன்னிரெண்டாயிரம் மைல்கள் தாண்டி அமெரிக்க நாட்டில். அமெரிக்கர்களாலேயே கட்டப்பட்ட கோவிலுக்குள் நின்றதும் உடல் முழுவதும் மின்சாரம் பாய்ச்சப் பெற்ற பரவச நிலைக்கு ஆளானேன். இந்திய நாட்டுச் சரித்திரம் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது என் மனதில் நிழலாடியது.

முகம்மதியர்கள் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் இந்துக்களைக் கொடுமைபடுத்தி மதம் மாற்றம் செய்தனர். அப்படி மதம் மாறியவர்கள் தான் இஸ்லாம் ஆனவர்கள். முசல்மானகள் என்று சொல்லப்படுபவர்கள்தான் அசல் முகம்மதியர்கள். முகம்மதியர்களுக்குப்பின் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனி மூலம் காலடி எடுத்து வைத்தனர். சில ஆண்டுகளில் ஆட்சியைக் கைப்பற்றினர். அவர்கள் ஆட்சியில் இந்துக்களைக் கொடுமைப்படுத்தி மத மாற்றம் செய்யவில்லை. அவர்கள் பல இடங்களில் மருத்துவமனைகளைக் கட்டினார்கள். நோயினால் துன்புற்று மருத்துவமனைக்கு வந்து நோய் குணமாகி வீட்டிற்கு மகிழ்ச்சியுடன் செல்கின்ற இந்துக்களிடம் கர்த்தர்தான் காப்பாற்றினார் என்று சொல்வார்கள். பள்ளி, கல்லூரிகளில் நம்மைப் படிக்க வைத்து பாடம் நடக்கும்போதே ஜீசசைப் பற்றிச் சொல்லி மனதில் பதிய

உ

ஓம் ஸ்ரீ கற்பக விநாயகர் துணை

# 34 நாட்கள் கொண்ட வடதேச இமாலய பத்ரிநாத் - கேதார்நாத் - காஷ்மீர் காசி யாத்திரை

**7-8-1989ம் தேதி சென்னையிலிருந்து G. S. காரேஜ் மூலம் பயணம் துவங்குகிறது.**

சென்னை — விஜயவாடா — பூரி — கல்கத்தா — கயா — காசி — அயோத்தியா — அலகாபாத் (பிரயாகை) — ஹரித்துவார் — ரிஷிகேசம் — பத்ரிநாத் — கேதார்நாத் — காஷ்மீர் — டெல்ஹி — மதுரா — ஆக்ரா — பம்பாய் — பண்டரிபுரம் — சென்னை.

காலை பலகாரம், காபி, பகல் சாப்பாடு, இரவு ஆகாரம், பத்ரி — கேதார் — காஷ்மீர் — பண்டரிபுரம் சென்று வரும் பஸ் கட்டணம், ஆங்காங்கு நகர் சுற்றிப் பார்க்கும் சிலவுகள், ரயில் கட்டணம் உள்பட நபர் 1க்கு ரூ. **4,750/-**

---

# தீபாவளி கங்கா ஸ்நானம் - தங்க அன்னபூரணி - விசாலாட்சி தேரிசனம்

**26 நாட்கள் கொண்ட தீபாவளி காசி யாத்திரை**

**11-10-1989ம் தேதி சென்னையிலிருந்து G. S. காரேஜ் மூலம் துவங்குகிறது.**

சென்னை — பம்பாய் — ஆக்ரா — மதுரா — (பிருந்தாவனம்) — டெல்ஹி — காஷ்மீர் — ஹரித்துவார் — ரிஷிகேஷ் — அயோத்தியா — அலகாபாத் — காசி — கயா — கல்கத்தா — சென்னை.

காலை பலகாரம், காபி, பகல் சாப்பாடு, இரவு ஆகாரம், காஷ்மீர் போய் வரும் பஸ் கட்டணம், ஆங்காங்கு நகர் சுற்றிப் பார்க்கும் சிலவுகள் ரயில் கட்டணம் உள்பட நபர் 1க்கு ரூ. **3,600 -**

*அட்வான்ஸ் ரூ. 1000/- வீதம் அனுப்பிப் பதிவு செய்ய வேண்டுகிறோம்.*

**சுபம்**

**டிராவல்ஸ் ஏஜென்ஸி.**

226, நாயக்கர் புதுத்தெரு, மதுரை-1. ☎ 22712

Prop: சொ. சுப்பிரமணியம்

வைத்து விடுவார்கள். கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பார்கள். ஏழை, எளிய மக்கள் இருக்கும் இடத்திற்குச் சென்று உதவி அளிப்பார்கள். முச்சந்திக்கு முச்சந்தி நின்று கர்த்தரின் சக்தியைப் போதிப்பார்கள். சிறு புத்தகங்களை விநியோகம் செய்வார்கள். இப்படியே வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல், மத மாற்றத்தைக் கட்டாயப் படுத்தாமல் மன மாற்றத்தை ஏற்படுத்துவார்கள். இருவர் குறிக்கோளும் ஒன்று தான்; வழி தான் வேறு. இப்படிப்பட்டவர்கள் ஆட்சியில் அடிமைகளாக வாழ்ந்த நமக்கு யாருடைய கட்டாயமும் இல்லாத நிலையில் அமெரிக்க நாட்டில் நமது மதத்தை ஒரு அமெரிக்கரே பரப்புவதைக் கண்ணுற்ற போது மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றேன்.

சுவாமி தரிசனம் செய்து விட்டு பிரகாரம் வந்தபோது அந்தக் கோவிலைச் சேர்ந்த சில அமெரிக்க சுவாமிகளைச் சந்தித்த போது, சிலர் பார்த்த முகங்களாக இருந்தனர். சற்று சிந்தித்தேன். ஹவாய் தீவில் கோவில் கட்டியுள்ள சுப்ரமணிய சுவாமி ஆண்டுதோறும் ஹவாயிலிருந்து இந்தியாவிற்கு வருவார்கள். அப்படி வரும் போது மதுரைக்கும் வருவார்கள். அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவிலில் அவர்களுக்கு ஒரு முறை வரவேற்பு அளித்திருக்கிறேன். இந்த விவரங்களை அங்குள்ள பிரதம சுவாமியிடம் சொன்ன போது அவரும் ''இந்த ஆலயத்தையும் சுப்பிரமணிய சுவாமி தான் கட்டினார். இப்போது ஹவாய் சென்றிருக்கிறார்'' என்று சொல்லி அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று மீனாட்சி அம்மன் கோவிலில் எடுத்த புகைப்படங்களையும் காண்பித்தார். அதில் என்னுடைய படங்களையும் பார்த்த போது பூரிப்படைந்தேன். பிரிய மனமில்லாமல் அடுத்த ஆண்டு மதுரையில் சந்திக்கலாமென்ற உத்திரவாதத்துடன் விடைபெற்றுக் கொண்டு வந்தேன்.

(வளரும்)

## பாராட்டுகிறோம்

கண்டரமாணிக்கம் திரு. எம். எம். மெய்யப்பன் - திருமதி சௌந்தரம் ஆச்சியின் புதல்வியான செல்வி எம். சித்ரா, மதுரை கேப்ரன் ஹால் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 1988-89



ஆம் ஆண்டு நிகழ்ந்த 10 ஆம் வகுப்புத் தேர்வில் 500க்கு 467 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். அதில் கணக்குப் பாடத்தில் 100 க்கு 100 பெற்றுள்ளார். அதற்காக செல்வி எம். சித்ராவைப் பாராட்டுகிறோம்.

## இலவச நோட்டுப் புத்தகங்கள்

மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் சார்பாக வழக்கம் போல் இவ்வாண்டும் நம் சமூகப் பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப் பெற்றன. சங்கத்தின் துணைத் தலைவர் திரு. பழ. இராமசாமி 4-6-89 அன்று நகர விடுதியில் அவற்றை வழங்கினார்.

# செய்தித்துறை அதிகாரி சொக்கு சுப்பிரமணியன்

'சொக்கு சுப்பிரமணியன்' என்ற பெயர், செய்தித் துறை அலுவலகங்களிலும், பத்திரிகை உலகிலும் மட்டுமல்ல பல்வேறு துறைகளிலும் பிரபலமாக விளங்கும் பெயராகும். ஆமாம் திரு. சொக்கு சுப்பிரமணியன் மதுரையில் உள்ள மத்திய அரசின் செய்தித்துறை அதிகாரி ஆவார். நல்ல நண்பர்; சுறுசுறுப்பான அதிகாரி.


கண்டனூரில் பிறந்தவர். இரணிக்கோயிலைச் சேர்ந்தவர். காரைக்குடி அழகப்பா கல்லூரியில் **M. A.** பட்டம் பெற்ற இவர், 1970 ஆம் ஆண்டில் **I. I. S. (Indian Information Service)** என்ற இந்திய செய்திப் பணியின் அந்தஸ்தினைப் பெற்றார்.

கண்டனூர் முத்தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்த போது இவர் பல சமூகச் சீர்திருத்த நாடகங்களை எழுதி அக்கழகத்தின் மூலமாக செட்டிநாட்டுப் பகுதிகளில் நடத்தினார். மணித்திரள், திருமுறுகாற்றுப் படை போன்ற நூல்களை வெளியிட்டார்.

முனைவர் வ. சுப. மாணிக்கனாரின் மாணவரான இவர், கல்லூரியில் **M. A.** படித்த காலத்தில் (1959-60) தமிழ் வளர்ச்சியைக் கருதி 'தமிழ் வளர் கதை' என்ற வில்லுப் பாட்டு நிகழ்ச்சியை அமைத்து செட்டி நாடெங்கும் நடத்தினார். அன்றைய மாணவர்களான அர. சிங்காரவடிவேலன், சி. எஸ். கருப்பன் செட்டி, தே. லூர்து, கோட்டையூர் அண. சம்பந்தம் போன்றவர்கள் இதில் பங்கேற்றார்கள். இதற்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆதரவு நல்கினார்.

கல்லூரியில் பயின்ற காலத்தில் இவர் காரைக்குடி கம்பன் திருநாள், குறள் விழா, இளங்கோ விழாக்களில் பங்கு பெற்றார். செட்டிநாட்டுப் பகுதிகளில் கவியரங்கங்கள், பட்டிமன்றங்களில் பங்கு பெற்றார். 1957ல் காரைக்குடியில் உரிமைப் போராட்ட நூற்றாண்டு விழாக் குழு நடத்திய கவிதைப் போட்டியில் முதல் பரிசாக வெள்ளிக் கோப்பை பெற்றார். 1958ல் கல்லூரி மாணவர்களுக்காக அரசுத் திட்டங்கள் பற்றி தமிழ்நாடு அரசு நடத்திய கவிதைப் போட்டியிலும் முதல் பரிசு பெற்றார்.

அழகப்பர் கல்லூரி, மாணவர் தலைவராக இருந்து கலை



விழாவை மூன்று நாட்கள் சிறப்பாக நடத்தினார். வள்ளல் அழகப்பர் பற்றி 'வள்ளல் கவிக் கோவை' என்ற இசை நிகழ்ச்சியைத் தயாரித்து இரண்டு ஆண்டுகள் நடத்தினார்.

''கண்ணதாசன்'' இதழில் 'என் சுவையில் கண்ணதாசன்' என்ற பெயரில் இவர் தொடர் கட்டுரை எழுதினார், கவியரசரின் கவிதைகளைத் திறனாய்வு செய்துள்ளார்.

இவர் மணித்திரள், அலைகள், உள்வெளிப்பயணம், நமக்குத்

தொழில் கவிதை போன்ற கவிதை நூல்களையும் திருச்சி சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை 'ஞானச் சுடர்' என்ற பெயரிலும் படைத்துள்ளார். பாரதிதாசனைப் பற்றி 'உதய கீதங்கள்' என்ற நூலில் விமர்சனம் செய்துள்ளார்.

சென்னையில் உள்ள பிரபல ஓவியர்களைப் பேட்டி கண்டு ''கணையாழி'' இதழில் இவர் எழுதியுள்ளதைப் பலரும் பாராட்டியுள்ளனர்.

திரு. சொக்கு சுப்பிரமணியன் 1961ல் புதுடில்லி வானொலி நிலையத்தில் தமிழ்ச் செய்திப் பிரிவில் துணையாசிரியராகத் தன் பணியைத் தொடங்கினர். புதுடில்லியில் இருந்தபோது டில்லித் தமிழ்ச் சங்கத்தில் இணைச் செயலாளராகச் சேவை செய்தார். பேரறிஞர் அண்ணாவின் மறைவின்போது அண்ணா பிள்ளைத் தமிழ் பாடி தமிழ்ச் சங்கத்தில் அதை அரங்கேற்றினர்.

இவர் 1971 முதல் 1988 வரை பல மாநிலங்களில் பல நகரங்களில் மத்திய அரசின் பல்வேறு பணிகளில் இருந்து கடமையாற்றியிருக்கிறார். குறிப்பாக திட்டக்குழு சென்னையிலிருந்து நடத்திய ''திட்டம்'' மாதம் இருமுறை இதழின் ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். இதில் புதுமை இலக்கியத்தை வளர்க்க வலிகோலினர். 1988 முதல் மதுரையில் பதினொரு தென் மாவட்டங்களுக்கான மத்திய அரசு செய்தித் துறை அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்.

திரு. சொக்கு சுப்பிரமணியன் தொலைக் காட்சியில் நலவழி நிகழ்ச்சிகளிலும் சென்னை வானொலியில் இலக்கிய நிகழ்ச்சிகளிலும் பலமுறை பங்கு பெற்றுள்ளார். வானொலிக்காக இவர் எழுதிய 'சிந்து பாடும் சேது நாடு' என்ற ஒரு மணி நேர உரைச் சித்திர நிகழ்ச்சியும் செட்டிநாடு மறவர் சீமை புகழ் பாடும் உரைச் சித்திரமும் நகரக் கோயில்கள் பற்றிய விளக்கமும் பலரால் பாராட்டப் பெற்றவையாகும்.

இவர் பணியில் இருந்த நகரங்களில் தம்மை நாடி வந்த ஏராளமான பேருக்கு பல்வேறு

வகைகளில் உதவி செய்து அவர்களது அன்பினையும் பாராட்டுதலையும் பெற்றுள்ளார்.

இராமேஸ்வரம் பற்றி 'அலை கடலில் ஓர் ஆனந்த மயிலி' என்றும் பாம்பன் சுவாமிகள் பற்றி 'கருணை பொழிந்திடும் கந்தன் நோக்கு' என்றும் உத்தரகோச மங்கை பற்றி 'ஊரெனப் படுவது உத்தரகோச மங்கை' என்றும் இவர் எழுதிய முத்தான மூன்று உரைச் சித்திரங்களை மதுரை வானொலி நிலையம் ஒலிபரப்பியுள்ளது. இவர் எழுதிய பல மெல்லிசைப் பாடல்களும் மதுரை வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன.

பழநி அருளாடியார் குட்டைய அய்யா வகையில் அவர் தம்பி சின்னையா அய்யா வழி வந்தவர் இந்த பெருமைக்குரிய, திரு. சொக்கு சுப்பிரமணியன். இவரது தந்தையார் சி. ராம. சொ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர், தீவிரவாதியான அவர் விடுதலைப் போராட்ட தீவிர வாதிகளுக்காக கண்டனூர் வைகைக் கரைக் காட்டில் முகாம் நடத்தியவர்.

இவரது தாயார் மீனாட்சி ஆச்சி அவர்கள் திருத்துறைப் பூண்டி, திருத்தங்கூர் ஆகிய தஞ்சை மாவட்டச் சிவன் கோயில்களைக் கட்டிய கண்டனூர் பெ. அழ. லெ. வீர. ராம. குடும்பத்தைச் சேர்ந்தவர்.

திரு. சொக்கு சுப்பிரமணியனின் மாமனார் கானாடுகாத்தான் வெ. வீர. நா. அரு. நாகப்ப செட்டியார் அவர்கள் M.L.C. ஆகவும் M.P. ஆகவும் இருந்தவர்கள். வள்ளல் அழகப்பர், காரைக்குடியில் செக்ரி ஆராய்ச்சி நிலையத்தைக் கொண்டுவருவதற்கும் மண்டபம் மீன்வள ஆராய்ச்சி நிலையம் ஏற்படுவதற்கும் காரணமாக இருந்தவர்கள்.

## வலையபட்டியில் ஒரு வேடிக்கை!

வலையபட்டியில் 18-5-89 அன்று நகரத்தார் பெருமக்கள் ஒன்பது பேருக்கு நடைபெற்ற பாராட்டு விழாவிற்குத் தலைமை ஏற்க வந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமிச் செட்டியார் அவர்களிடம் ''இவர்கள் தான் எனது மாப்பிள்ளை'' என, நற்சாந்துபட்டி ஏஎல். பெரியகருப்பன் அவர்களை நமது இதழின் ஆசிரியர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தபோது ''நீங்கள்தான் மாப்பிள்ளைபோல் இருக்கிறீர்கள்'' என டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் வி. என். சிடி. அவர்களைப் பார்த்து வேடிக்கையாகக் கூற, பக்கத்தில் இருந்தவர்கள் அதை ஆமோதிக்கும் விதமாக கரவொலி செய்து மகிழ்ந்தனர்.

## நடிக்க வாய்ப்பு

''இங்குள்ள அரசு அலுவலகங்கள் வேறு எங்கும் மாற்றப்படாமல் இருக்க, திரு. தென்னரசு எனக்கு உதவி செய்ய வேண்டும். அவ்வாறு உதவி செய்து தந்தால் என்னுடைய படங்களில் அவருக்கு நடிக்க வாய்ப்புத் தருவேன் என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.''

— இராம. நாராயணன்

(காரைக்குடியில் 7-5-89 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில்)

திரு. சொக்கு சுப்பிரமணியனின் தம்பி திரு. சொ. பழநிமலை சமூகப் பணி ஆற்றுவதில் தீரர். காவிரிப்பூம்பட்டினம் திருவிழாவில் அவரது தன்னலமற்ற சேவையைக் காணலாம்.

திரு. சொக்கு சுப்பிரமணியனின் மனைவி திருமதி சாந்தா சுப்பிரமணியன் ''வண்ணங்கள்'' என்ற பெயரில் இலக்கிய இதழ் ஒன்றை புதுச்சேரியிலிருந்து வெளியிட்டார். சிற்றேடுகளிடையே தனி இடம் பெற்ற அது, இப்போது வெளிவரவில்லை. இவர்களுக்கு சுப்பிரமணியம், பழநியப்பன், சொக்கலிங்கம் என முத்தாக மூன்று பிள்ளைகள்.

மதுரையில் சில சமூகத்தினர் தனியே மருத்துவமனைகளை நடத்தி குறைந்த கட்டணத்தில் சமூகப் பணி செய்துவருவதாகவும் அதுபோல் நகரத்தாருக்கென மதுரையில் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த இளம் டாக்டர்கள் உதவியுடன் ஒரு மருத்துவமனையை ஏற்படுத்த வேண்டுமென்பது தன் விருப்பம் என்றும் கூறுகிறார் திரு. சொக்கு சுப்பிரமணியன்.

நகரத்தார் இளைஞர்கள் ஒரு சில துறைகளை மட்டுமே நாடாது பல துறைகளிலும் முன்னுக்கு வரவேண்டுமென்றும், கண்டனூர் நகரத்தார் இளைஞர் சங்கம் பந்தி வைப்பது முதல் பாடை தூக்குவது வரை எல்லாவற்றிலும் ஈடுபட்டுச் செலவைக் குறைப்பதாகவும் அது போல் அந்த முயற்சி எல்லா ஊர்களுக்கும் பரவ வேண்டுமென்றும் இவர் தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறார்.

அந்தந்த நகரங்களில் வாழும் நம்மவர்கள் அனைவரும் அந்தந்த நகரங்களில் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கூடி விவாதித்தால் நம் சமூகத்தில் உள்ள பல பிரச்னைகளுக்குத் தீர்வு காணமுடியுமென்றும் இந்த முயற்சியை இளைஞர் அணி மேற்கொள்ள வேண்டும் என்பது தனது விருப்பம் என்றும் இவர் கூறுகிறார்.

''எனது அம்மான் புதுவயல் யெ. மு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் படிக்கும் காலத்திலிருந்தே என்னுடன் சகோதரராகப் பழகியவர்கள். வேந்தன்பட்டி திரு. பழநியப்பன் இராமசாமி என் உடன்பிறவாச் சகோதரர். நான் பள்ளம் மேடுகளில் தவறாமல் செல்ல ஊன்றுகோலாக உதவிய அவ்விருவரையும் நான் எப்போதும் மறக்கமாட்டேன்'' என்று அவர் கூறி நேர்முகத்தை முடித்தார்.

**நேர்முகம்: எல். சுந்தரம்.**

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்: 16-2-1930** **மறைவு: 27-6-1981**

## லெட்சுமி M. சிங்காரம் செட்டியார்

*அச்சடிக்கும் காகிதத்தின் அரசர் ஆனார்*
*அறப்பணிகள் தொடங்குங்கால் அமரர் ஆனார்*
*நிச்சயமாய் லெட்சுமி சிங்காரம் செய்த*
*நிகரில்லாத் தனிச்சேவை நெஞ்சில் நிற்கும்*

## லெட்சுமி பேப்பர் ஸ்டோர்ஸ்

**38, கீழ ஆவணி மூல வீதி, மதுரை-625 001**

தந்தி: 'Paper Queen'

தொலைபேசி: 22273
& 37252
(இல்லம்) 41704 & 45308

# நகரப் பேருந்தில் நகைச் சுவை!

9-6-89 வெள்ளிக்கிழமை மாலை மதுரையில் உள்ள அண்ணு நகர் சென்று விட்டு நகரப் பேருந்து ஒன்றில் நகர் நோக்கி வந்து கொண்டிருந்தேன்.

பேருந்து, பொது மருத்துவ மனை அருகே வந்தபோது பேருந்தில் நின்றுகொண்டு வந்த ஒரு ஆள் கணீரென்று 'மலர்ந்தும் மலராத பாதி மலர் போல வளரும் விழி வண்ணமே' என்று தொடங்கும் ''பாசமலர்'' படத்தின் பாடலைப் பாடிக் கொண்டே வந்தார். அந்தப் பேருந்தில் பயணம் செய்தவர்கள் பாட்டுச் சப்தம் கேட்டு அந்த ஆளைக் கண்ணுற்றவாறே சிரித்து மகிழ்ந்தனர்.

பேருந்தின் நடத்துனரோ ''அய்யா வண்டிக்குள் பாடக் கூடாது. பொது மக்களுக்கு இடையூருக இருக்கும். அடுத்த நிறுத்தத்தில் இறங்கி சௌகரியமாக அமர்ந்து பாடிவிட்டு வாருங்கள்'' என்ருர்.

அந்தஆள் அதை இலட்சியம் செய்யாமல் பாடிக் கொண்டே வந்தார். இடையிடையே ''ஆகா என்ன பாட்டு.... என்ன பாட்டு.... கவிஞன்னு அவன் தான் கவிஞன்.... அப்பா கண்ணதாசா! உன் வழியில் நானும் வர்ரேனப்பா'' என்றும் ''நடிகைன்ணு அவள் தான் நடிகை.. சாவித்திரி.. உலகப் பேரழகி.. ஆஹ்..ஹ்..ஹா..'' என்றும் ''ஆகா சிவாஜி மாதிரி நடிக்கிறதுக்கு இந்த உலகத்திலே ஆளே இல்லை. நடிகர் திலகம் அல்லவா! அந்தப் பட்டத்தைச் சும்மா, தெரியாமலா கொடுத்தாங்க.. ஆஹ்..ஹ்..ஹா..'' என்றும் பேசிக் கொண்டே வந்தார்.

இடையில் பாண்ட், ஷர்ட் அணிந்த ஒருவர் ''அய்யா பேசாமல் வாய்யா..'' என அவரைப் பார்த்துக் கூற—

''நீ பேசாமல் வா சார். கலைஞர் உனக்குச் சம்பள உயர்வு கொடுக்கல்ல.. அப்புறம் என்ன? ஆட்டோ ரிக்ஷாவிலோ, ரிக்ஷாவிலோ போக வேண்டியது தானே.. என் கூட பஸ்ஸிலே ஏன் வர்றே..'' என்றவுடன் அந்த ஆள் எதுவுமே பேசவில்லை.

பாடிக் கொண்டு வந்த அந்த ஆளுக்கு மனநோய் எதுவுமில்லை; 'தண்ணி'யில் தவிக்கிருர் என்பது எல்லோருக்கும் புரிந்து விட்டது.

நான் இறங்க வேண்டிய இடம் வந்தவுடன் இறங்கி விட்டேன். அந்த ஆள் பாடிக் கொண்டே சென்ருர். எவ்வளவு தூரம் பாடிக் கொண்டே சென்ருரோ!

— ''எல்லெஸ்'

## திருமணம்

ஆ. தெக்கூர் மது. பழ. சுப. கதிரேசன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் எழுத்தாளர் அருண்குமார் என்கிற அருணுசலம் எம். ஏ. க்கும். கண்டவராயன்பட்டி சி. உ. மா. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி இராமலெட்சுமி பி. ஏ. க்கும் கண்டவராயன் பட்டியில் 19-5-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

## திருமணம்

பாகனேரி சுப. ஆவி. சுப. வள்ளியப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி கண்ணுத்தாள் என்கிற சாந்திக்கும் ஒக்கூர் சித. கருப்பன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சிந்தாமணிக்கும் 27-3-89 அன்று பாகனேரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

# காவிரிப்பூம்பட்டினத்தில் பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா!

நாம் பிறந்த மண்ணுன காவிரிப்பூம்பட்டினத்தில் திருவெண்காடராகிய பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா, வழக்கம் போல் இந்த ஆண்டும் நடைபெற உள்ளது. சுக்ல ஆண்டு ஆடி மீ 22 உ (6-8-89) முதல் ஆவணி மீ 1 உ(17-8-89) வரை 12 நாட்கள் இத்திருவிழா கொண்டாடப்பட உள்ளது.

## நிகழ்ச்சி விவரம்

6-8-89 ஞாயிறு (1 ஆம் திருவிழா) திருவெண்காடர் திரு அவதாரம்.

7-8-89 திங்கள் (2 ஆம் திருவிழா) திருவெண்காடர் திருவெண்காட்டிற்கு எழுந்தருளி சிவதீட்சை பெற்றுக் கொள்ளுதல்.

8-8-89 செவ்வாய் (3 ஆம் திருவிழா) திருவெண்காடர் முக்குள ஸ்நானம், திருக்கல்யாணம்.

9-8-89 புதன் (4 ஆம் திருவிழா) மருதவாணர் குழந்தையாக எழுந்தருளல். மருதவாணர் நிறைக்குப் பொன் நிறுத்துக் கொடுத்தல்.

10-8-89 வியாழன் (5 ஆம் திருவிழா) மருதவாணர் கப்பல் யாத்திரைக்குக் கடற்கரை செல்லல். துறவடைதல். சேந்தனுருக்கு விலங்கிடல்.

11-8-89 வெள்ளி (6 ஆம் திருவிழா) பட்டினத்தடிகள் பிட்சைக் கெழுந்தருளல், அப்பம் அளித்தலும் வீடு தீப்பற்றுதலும்.

12-8-89 சனி (7 ஆம் திருவிழா) ஞானகலாம்பிகை பரிபூரணமடைதல். சுவாமியும் அம்மனும் இடபாரூடராய் எழுந்தருளி மோட்சம் கொடுத்தல்.

13-8-89 ஞாயிறு (8 ஆம் திருவிழா) திருவாரூர்ப் பிள்ளையைப் பிழைப்பித்தல். இரவு கழுமரம் எரித்தல்.

14-8-89 திங்கள் (9 ஆம் திருவிழா) பத்திரகிரியாரும் நாயடியாரும் அடிகள் அருளால் மோட்சமடைதல். தங்கப் பேய்க் கரும்பு தாங்குதல்.

15-8-89 செவ்வாய் (10 ஆம் திருவிழா) பட்டினத்தடிகள் குருபூஜை. சேந்தனுர் விலங்கு தெறித்தல், ருத்ராபிஷேகம். இரவு பஞ்சமூர்த்திகளும் பட்டினத்தடிகளும் திருவீதி வருதல்.

16-8-89 புதன் (11 ஆம் திருவிழா) பஞ்சமூர்த்திகளும் திருவெண்காடரும் இடபவாகனக் காட்சியுடன் கடற்கரைக்கு எழுந்தருளி தீர்த்தங் கொடுத்தல்.

17-8-89 வியாழன் (12 ஆம் திருவிழா) ருத்ராபிஷேகமும் விடையாற்றியும்.

---

## மணி விழா

சொக்கநாதபுரம் திரு. வெ. அண்ணுமலை செட்டியார் திருமதி வள்ளியம்மை ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 10-6-89 அன்று பிள்ளையார்பட்டியில் சிறப்பாக நடைபெற்றது. 'ஸ்பிக்' நிறுவனத்தின் பொது மேலாளர் திரு. சிதம்பரம் செட்டியார் வரவேற்றுர். 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் 'மீனுட்சி திருக்கல்யாணம்' பற்றி உரையாற்றினுர். திரு. இராம. முத்துராமன் செட்டியார் நன்றி கூறினுர்.

# உங்கள் குரல்

மே' 89 ''குரல்'' படித்தேன். பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள் எழுதியுள்ள 'மறைந்த மாணிக்கம்' கட்டுரை, உள்ளத்தைத் தொட்டது. தெய்வபக்தி, ஆண்டவன் தொண்டு, தமிழ்ப் பற்று ஆகியவற்றில் உள்ளன்புடன் ஈடுபடுபவர்கள் நகரத்தார்கள் என்பதற்கு டாக்டர் வ. சுப. மா. அவர்கள் ஓர் எடுத்துக் காட்டான மனிதர். 'சாவில் தமிழ் படித்துச் சாக வேண்டும்-எந்தன் சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும்' என்ற கவிதை வரிகளை நாமும் பின்பற்றிப் பெருமைப் படுவோமாக.

அரு. சோம. சண்முகநாதன்
உலகம்பட்டி

ஜூன்' 89 இதழில் வ. சுப. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களுடன் எல். சுந்தரம் அவர்கள் கண்ட நேர்முகம் சிறப்பாக அமைந்திருந்தது. மூதறிஞர் வ. சுப. மா. அவர்களின் அருமை பெருமைகள் பலரும் அறிந்து கொள்ளும் வண்ணம் இருந்தது.

மேலைச்சிவபுரி முத்துராமன்
திருச்சூர்

திரைப்பட இயக்குநர் இராம. நாராயணனின் பேட்டி, வ. சுப. சொக்கலிங்கம் செட்டியாருடன் நேர்முகம், காரைக்குடி பாராட்டு விழா, வலையபட்டி பாராட்டு விழா என்று வெளியிட்டு என் போன்ற வாசகர்களைத் திக்கு முக்காட வைத்து விட்டீர்கள்.

இராம. கண்ணப்பன்
நாட்டரசன்கோட்டை

தனது அண்ணன் வ. சுப. மாணிக்கனார் பற்றி முழுமையாகச் சொன்ன வ. சுப. சொ. அவர்கள் தன்னைப் பற்றி ஒரு வரி கூடக் கூறவில்லையே! இது போன்ற சுயநலமில்லாதவர்களை இப்போது பார்ப்பது அரிது.

வெ. ராஜாமணி
திருச்சி

வ. சுப. மாணிக்கனாரின் அருமை பெருமைகளை, தமிழ்ப் பற்றை நேர்முகத்தின் மூலம் வெளியிட்டு என்னைப் போன்றவர்களுக்கு தமிழ் ஆர்வத்தை ஊட்டிய ''குரலு''க்கு நன்றி. இராம. நாராயணனின் பேட்டியும் அருமை.

கே. நாராயணன்
காரைக்குடி



# செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ முனைவர் ஆறு. அழகப்பன் அவர்கள் இரண்டாவது முறையாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு உறுப்பினர்களில் ஒருவராகப் போட்டியின்றித் தேர்வு செய்யப் பெற்று நியமிக்கப் பெற்றிருக்கிறார்கள்.

ஃ வெளுவூர் கிராமம் அருள்மிகு மாசாத்து அய்யனார் திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா 8-6-89 அன்று சிறப்பாக நடைபெற்றது. (இதன் திருப்பணிக் குழுத் தலைவர் கோனாபட்டு ச. முரு. முருகப்ப செட்டியார் அவர்கள்)

ஃ கோனாபட்டு அருள்தரு கொப்புடையம்மன் கோவிலின் சப்தாவர்ண மண்டகப்படியை 31-5-89 அன்று கோனாபட்டு சுப. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள் உபயமாக சிறப்புற நடத்தினார்கள். அதனையொட்டி கலை நிகழ்ச்சிகளும் அம்மன் திருவீதி உலாவும் நடைபெற்றன.

ஃ சொக்கலிங்கம்புதூர் நகரச் சிவாலயத்தின் 70 ஆம் ஆண்டு வருடாபிஷேக விழா 15-6-89 அன்று ஜெபம், அபிடேகம், அலங்காரம், திருமணக் காட்சி, அர்ச்சனை. பஞ்சமூர்த்தி உலா முதலியவற்றுடன் சிறப்பாக நடந்தேறியது.

ஃ பொன். புதுப்பட்டி திரு. எம். நாராயணன் கார்போராண்டம் யுனிவர்ஸல் லிட் சார்பாக 12-5-89 முதல் 29-5-89 வரை இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் சென்று வந்திருக்கிறார்.

ஃ முனைவர் வ. சுப. மாணிக்கனார் தொடங்கிய தமிழ்வழிக் கல்வி இயக்கத்தினர் தமிழ் வழிக்

## முனைவர் பட்டம் பெற்றவர்கள் கவனத்திற்கு . . .

நகரத்தார்களில் ஏராளமான பேர் ஆய்வு செய்து முனைவர் (Doctorate) பட்டம் பெற்றிருக்கிறார்கள். அவ்வாறு முனைவர் பட்டம் பெற்றவர்களின் முழுமையான பட்டியல் ஒன்றை ''நகரத்தார் குரல்'' இதழில் வெளியிட விரும்புகிறோம், ஆகவே முனைவர்கள் தங்களது பெயர், சொந்த ஊர், கோயில், கல்வித் தகுதி, ஆற்றி வரும் பணி, ஆய்வு மேற்கொண்ட தலைப்பு, பட்டம் பெற்ற பல்கலைக் கழகம், பட்டம் பெற்ற ஆண்டு போன்ற முழு விவரங்களையும் எமக்குத் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

— ஆசிரியர்
''நகரத்தார் குரல்''

கல்வி வேண்டி 11-6-89 அன்று கோவையில் ஊர்வலமும்பொதுக் கூட்டமும் நடத்தினர்.

ஃ 'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன் அவர்களின் 54 ஆவது ஆண்டு பிறந்த தின விழா 14-8-89 அன்று காவிரிப்பூம் பட்டினத்தில் கொண்டாடப் பெற உள்ளது.

ஃ முனைவர் தமிழண்ணல் அவர்களும் முனைவர் மெ. சுந்தரம் அவர்களும் மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் பழைய மாணவர்கள்.

ஃ முனைவர் ஆறு. அழகப்பன் அவர்கள் சிறப்பாசிரியராக இருந்து நாடகத்துறைக்கென ''நாடகக்கலை'' என்ற பெயரில் மாத இதழ் ஒன்றைச் சில ஆண்டுகள் நடத்தினார்கள்.

ஃ வேலங்குடி ஸ்ரீ பெரியநாயகி அம்மன் அருள்மிகு வயல் நாச்சியம்மன் கோயில்களில் ஏழூர் செவ்வாய் விழா 11-4-89 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ தேவகோட்டை அரு. லெ. சாமி வீடு புதுப்பிக்கப் பெற்று 8-6-89 அன்று சம்ப்ரோட்சணம் நடைபெற்றது.

ஃ குன்றக்குடி அன்னதான மடமும் அதில் உள்ள ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவிலும் புதுப்பிக்கப் பெற்று 5-7-89 புதன்கிழமை காலை 11-15க்கு மேல் 11-45 மணிக்குள் மஹாகும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

ஃ சுவாமிமலை நகர மடத்திற்குப் புதிதாகச் செய்யப் பெற்ற அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியின் புதிய விக்ரஹம் 21-6-89 அன்று பிரதிஷ்டை செய்யப் பெற்று மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

## தமிழ்த் தாத்தாவும் கும்மாயமும்

தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் சங்க இலக்கியநூல் ஒன்றைப் பதிப்பித்து வந்தபோது பாடல் ஒன்றில் 'கும்மாயம்' என்ற ஒரு ஒரு சொல் வந்தது. 'கும்மாயம்' என்பதற்குப் பொருள் என்ன என்று அவர்களுக்குத் தெரியவில்லை. பாடல் முழுவதையும் படித்துப் பார்த்தபோது 'கும்மாயம்' என்பது ஒரு இனிப்பான பண்டம் என்று யூகித்தார்கள்.

அய்யர் அவர்கள் ஒருமுறை செட்டிநாட்டுத் திருமணம் ஒன்றுக்குச் சென்றிருந்தார்கள். பந்தி விசாரித்தவர்கள் அய்யர் அவர்களுக்குக் கும்மாயம் பரிமாறும்படி சொன்னார்கள். 'கும்மாயம்' என்ற சொல்லைக் கேட்டதும் அய்யர் அவர்கள் மகிழ்ச்சி கொண்டு அது பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டார்கள் 'அப்பனே! கும்மாயம்! உன்னை எங்கெல்லாம் தேடினேன்' என்று மகிழ்ச்சியுடன் கும்மாயத்தை அய்யர் அவர்கள் வணங்கி, பின்னர் சுவைத்தார்களாம்.

— அள. சித. சொ. தெ.
**சொக்கலிங்கம்**
காரைக்குடி

## மணி விழா

முன்னாள் தலைமை ஆசிரியரும் காளையார்மங்கலத்தைச் சேர்ந்தவருமான குப. மு. நா. சபாரத்தினம் செட்டியார் அவர்களுக்கும் சிவகாமி ஆச்சி அவர்களுக்கும் 9-5-89 அன்று காளையார்மங்கலத்தில் 60ஆம் ஆண்டு நிறைவு மணி விழாச் சிறப்பாக நடைபெற்றது.

## செல்லாத்தாள் பள்ளித் தொடக்க விழா

கண்டனூரில் 7-6-89 அன்று காலை செல்லாத்தாள் நர்சரி பள்ளித் தொடக்க விழா கண்டனூர் ஊராட்சித் தலைவர் திரு. வயி. சிதம்பரம் செட்டியார் தலைமையில் நடைபெற்றது. பள்ளியின் உரிமையாளர் புலவர் திரு. இராம. வீரப்பன் வரவேற்றார். முனைவர் மெ. சுந்தரம், தாலாட்டுக் கவிஞர் T. குமரப்பன் கேஎம். சுப்பிரமணியன், நா. கருப்பையா, செவ்வேள் அருட்கவி துரைசிங்கம், 'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன், பேராசிரியர் அர. சிங்காரவடிவேலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## குன்றக்குடியில் வழக்காடு மன்றம்

வைகாசி விழாவையொட்டி குன்றக்குடியில் 20-5-89 சனி மாலையில் 'குணமென்னும் குன்றேறி நிற்கும் வாய்ப்புக் கிடைத்தும் குன்றேறாதவர்கள் குற்றவாளிகள்' எனும் தலைப்பில் வழக்காடுமன்றம் நடைபெற்றது. புலவர் திரு. கதிரேசன் வரவேற்றார். திரு. தெ. முருகசாமி வழக்குத் தொடுத்தார். புலவர் மாமணி திரு, மா. முத்துராமன் எதிர் வழக்காடினார். நடுவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் 'குற்றவாளிகளே' எனத் தீர்ப்பு வழங்கினார்.

## திருமணம்

கண்டரமாணிக்கம் பெரி. வ. நா. நாச்சியப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் அண்ணாமலை B. Com க்கும் அரண்மனை சிறுவயல் லெ. அ. லெ. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி வெள்ளச்சி என்ற மீனாட்சி B Sc. க்கும் அரண்மனை சிறுவயலில் 14-6-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

## வேந்தன்பட்டி திருமணத்தில் ஆய்வரங்கம்

மகிபாலன்பட்டி திரு. சோ. சிவப்பிரகாசம் செட்டியார் புதல்வன் செல்வன் சுருளிவேலுக்கும் வேந்தன்பட்டி திரு. பெரி. நாகப்ப செட்டியார் புதல்வி செல்வி விஜயாவுக்கும் வேந்தன் பட்டியில் 25-5-89 அன்று நடைபெற்ற திருமணத்தையொட்டி ஆய்வரங்கம் ஒன்று நடைபெற்றது. புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் தலைமைப் பொறுப்பேற்றார், தாலாட்டுக் கவிஞர் திரு. T. குமரப்பன் வரவேற்றார். துர்க்கை அம்மன் கோயில் அருளாடியார் திரு. கிருஷ்ணன் செட்டியார் தொடக்கவுரையாற்றினார். 'கண்ணதாசன் மிகுத்துப் பாடியது இல்லறப் பாடல்களே' என்று திருமதி சி. எஸ். விசாலாட்சியும் 'இறையன்புப் பாடல்களே' என்று முனைவர் திரு. பழ. முத்தப்பனும் பேசினார்கள். 'இல்லறமும் இறையன்பும் நீக்கமற இணைந்ததுவே' என்று நடுவர் தீர்ப்புரை வழங்கினார்.

## பாராட்டு விழா

காரைக்குடி நகரச் சிவன் கோவில் குட நீராட்டைச் சிறப்பாக நடத்திய குழுவினருக்கு நகரச் சிவன் கோவிலில் பாராட்டு விழா 10-4-89 அன்று நகர் மன்றத் தலைவர் திரு. சித. சிதம்பரம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. திரு. அ. திருநாவுக்கரசு செட்டியார் அனைவரையும் வரவேற்றார். தலைவர் அனைவருக்கும் பொன்னுடை போர்த்தினார். 'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன், சரஸ்வதி ராமநாதன் முனைவர் வெ. சு. அழகப்பன். முனைவர் கரு. முத்தையா முதலியோர் பாராட்டிப் பேசினர். ந. மெய்யப்பன் நன்றி கூறினார்.

## கூட்டுத் திருமணங்கள் : திருச்சி நகரத்தார் சங்கத்தின் அறிவிப்பு!

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆதரவில் அடுத்த கூட்டுத் திருமணங்களை, வரும் சுக்ல ஆண்டு ஆவணி மாதம் 22 ஆம் நாள் (7-9-1989) வியாழக்கிழமை பிள்ளையார்பட்டியில் வழக்கம் போல் நடத்த இருப்பதாகவும் விரும்புவோர் அதற்கான விண்ணப்பங்களை அனுப்புமாறும் திருச்சி நகரத்தார் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-


தலைவர்
**நகரத்தார் சங்கம்**
2 ஒத்தமால் தெரு
திருச்சி-620 002

# அலவாக்கோட்டைச் சிவன் கோயிலில் திருக்குட நன்னீராட்டு விழா


பசும்பொன் தேவர் திரு மகன் மாவட்டம் மதகுபட்டி அருகே உள்ள 'ஆபரண நல்லூர்' என்னும் அலவாக்கோட்டையில் கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு மீனுட்சி சொக்கலிங்கேஸ்வரர் திருக்கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா 65 ஆண்டுகளுக்குப்பின் 5-6-89 திங்கட்கிழமை காலே 9-25 மணி அளவில் சிறப்பாக நடைபெற்றது. முனைவர் திரு. பழ. முத்தப்பன் குட நீராட்டின் போது நேர்முக வர்ணனை செய்தார்.

திருக்குட நன்னீராட்டை ஒட்டி 3-6-89 மாலே முதல் 5-6-89 காலே வரை நான்கு காலம் யாகசாலைப் பூஜைகள் நடைபெற்றன. யாகசாலையில் மீனுட்சி அம்மனுக்கு 5 ஓம குண்டங்களும் சொக்கலிங்கேஸ்வரருக்கு 5 ஓம குண்டங்களும் பரிவார தெய்வங்களுக்கு 10 ஓம குண்டங்களும் ஆக 20 ஓம குண்டங்கள் அமைக்கப் பெற்றிருந்தன.

பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயிலைச் சேர்ந்த சர்வசாதகம் டாக்டர் கே. பிச்சைக்குருக்கள் தலைமையில் திருவாடானை கணேச குருக்கள் பொள்ளாச்சி செல்லப்பா குருக்கள், இராமநாதபுரம் சங்கர குருக்கள், பகீரத குருக்கள் மதுரை குமாரசாமி பட்டர் போடிநாயக்கனூர் கணேசசிவம் போன்ற 35 சிவாசாரியர்களும் காளையார்கோவில் ஹரிகர கனபாடிகள், காரைக்குடி சஞ்சீவி ராமசர்மா, சென்னை நாராயண கனபாடிகள், கோனேரி ராஜபுரம் ராமகிருஷ்ணசர்மா,



5-6-89 அன்று திருக்குட நன்னீராட்டு நடைபெற்ற அலவாக்கோட்டைச் சிவன் கோயிலின் எழில் தோற்றம்.



அலவாக்கோட்டை நகரச் சிவன் கோயிலின் குடநீராட்டை யொட்டிய யாகசாலை நன்கொடையாளர் சித. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் யாக சாலையின் மேற்பார்வையாளர் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் (பாலகவி) அவர்களை பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கும் காட்சி.

---

ஸ்ரீ ராமசர்மா, காளையார் கோவில் வீரமணி கனபாடிகள், சோமுகுருக்கள் போன்ற 7 வேத பாராயணர்களும் யாகசாலைப் பூஜைகளிலும் நன்னீராட்டு விழாவிலும் பங்கு பெற்றுச் சிறப்பித்தனர்.

பொன்.முத்தையா ஓதுவார் தலைமையில் 6 பேர் திருமுறை பாராயணம் பாடினர். பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் வேத சிவாகம வித்தியாசாலை மாணவர்கள் மூல மந்திரம், ஜெயபாராயணம் பாடினர்.

யாகசாலைப் பூஜை முதலியவற்றை தேவகோட்டை சிவஸ்ரீ தத்புருஷதேசிகர் (பாலகவி) அவர்கள் மேற்பார்வையில் அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தைச் சேர்ந்த திரு. கரு. சோமசுந்தரம் செட்டியார், தேவகோட்டை திரு. லெ. சுப. சுப்பிரமணியன் செட்டியார், கல்லல் திரு. சே. வள்ளியப்ப செட்டியார், கல்லல் திரு. பழநியப்ப செட்டியார் ஆகியோர் பொறுப்பேற்றுச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

திருக்குட நன்னீராட்டு விழாவை ஒட்டி 3-6-89 அன்று மாலை அருட்கவி திரு. கு. செ. இராமசாமி 'அதிக வரம் பெறலாம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். இரவு மயிலாடுதுறை திரு. மணிவாசகம் குழுவினரின் பொம்மலாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது.

4-6-89 காலை 'அருள் வழங்குவதில் முன்னிற்பவர் அம்மை-யா, அப்பனு' என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது. 'அம்மையே' என்று டாக்டர் திரு. பழ. முத்தப்பனும் 'அப்பனே' என்று திரு. எல். கே.

சுபாஸ் சந்திரபோஸனும் வழக்காடினர். நடுவராக டாக்டர் திரு. க. சின்னப்பா பொறுப்பேற்றிருந்தார். மாலை டாக்டர் மா. இராமகிருஷ்ணனும் செல்வி இராம. சுகந்தியும் 'வாக்கிற்கு அருணகிரி' என்ற பொருளில் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தினர். இரவு திண்டுக்கல் அங்கு விலாஸ் உரிமையாளர் திரு. டி.சல்லமுத்து குழுவினரின் மாண்டலின் இன்னிசை நிகழ்ச்சியும் வி. சுவாமிநாதன் குழுவினரின் வாய்ப்பாட்டும் நடைபெற்றன. அடுத்து தேவர்டிரான்ஸ்போர்ட் உரிமையாளர் சார்பாக 'கீதாலயா' இசைக் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

5-6-89 அன்று மாலை பேராசிரியர் திரு. சுப. கதிரேசன் தலைமையில் 'இன்றைய நிலையில் எங்கள் கடமை' என்ற பொதுத் தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர்கள் இராகவன் முத்து, சிவல்புரி சிங்காரம், டாக்டர் சபா. அருணாசலம், கரு. சிதம்பரம் ஆகியோர் பங்கு பெற்றனர். இரவு கோவை கமலா குழுவினரின் பக்திப் பாடல் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. நள்ளிரவு 'குறிஞ்சி' இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

திருக்குட நன்னீராட்டு நாளன்று மாலை மகா அபிஷேகமும் நள்ளிரவு பஞ்ச மூர்த்திகள் திருஉலாவும் சிறப்பாக நடந்தேறின.

இத்திருக்குட நன்னீராட்டு விழா திருப்பணிக் குழுவின் தலைவர் சி. அரு. சிள. இராமநாதன் செட்டியார் அவர்களும் நிர்வாகச் செயலாளர் & பொருளாளர் நாக. நாகப்ப செட்டியார் அவர்களும் மற்றும் பல்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்களும் சிறப்பாகச் செயலாற்றி திருக்குட நன்னீராட்டு இனிதே நடைபெற உதவினர்.

திருக்குட நன்னீராட்டுப் பணிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் தடங்கலின்றி நடைபெற திண்டுக்கல் அங்கு விலாஸ் நிறுவன உரிமையாளர்கள் தமது செலவில் ஜெனரேட்டர் வசதி செய்து கொடுத்துப் பெரிதும் உதவினர்.

# திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் : சில செய்திகள் !

ஃ திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் தென் மாவட்டங்களுக்குத் தாய் நிலையமாக, 16-5-1939 அன்று ஒலிபரப்பைத் தொடங்கியது. இதனைத் துவக்கி வைத்தவர் அப்போதைய சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த திரு. சி. ராஜகோபாலச்சாரியார் என்ற இராஜாஜி அவர்கள்.

ஃ திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் ஒலிபரப்பான முதல் நிகழ்ச்சி, பெரம்பலூர் அங்கப்ப பிள்ளையின் நாதஸ்வர இசை ஆகும். இதைத் தொடர்ந்து அரியக்குடி இராமானுஜ ஐயங்காரின் இசையரங்கு ஒலிபரப்பாயிற்று. அவர் பாடிய முதல் பாடல் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' ஆகும்.

ஃ திருச்சி வானொலி நிலையத்தில் 1961—ஆம் ஆண்டில் 50 கிலோவாட் ஒலிபரப்பி நிறுவப்பட்டது. 3-3-1961 அன்று அன்றையத் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கே. காமராஜ் இந்தப் புதிய விரிவான ஒலிபரப்பைத் துவக்கி வைத்தார். 2-11-1961 முதல் புதிய சொந்தக் கட்டிடத்தில் திருச்சி வானொலி ஒலிபரப்பைத் துவக்கியது. 1988—லிருந்து 100 கிலோவாட் ஒலிபரப்பி இயங்குகிறது.

ஃ திருச்சி வானொலி நிலையத்தில் 8 நிகழ்ச்சி அரங்குகள் உள்ளன. குளத்தூரில் ஒலிபரப்பியும் முத்துக்குளத்தூரில் நிகழ்ச்சி அஞ்சல் நிலையமும் உள்ளன.

ஃ திருச்சி வானொலி நிலையத்தில் 1966-ஆம் ஆண்டு பண்ணை இல்ல ஒலிபரப்புத் தொடங்கியது. உழவர் பெருமக்களிடையே பசுமைப் புரட்சிக்கு வித்திட்டது, இந்தப்பிரிவு.

ஃ 16-5-1924ல் இந்தியாவின் முதலாவது ''ரேடியோ கிளப்'' சென்னையில் துவக்கப்பட்டது. பம்பாயில் 23-7-1927 அன்று 1. 5 கிலோவாட் மத்திய அலை ஒலிபரப்பியை அன்றைய வைஸ்ராய் இர்வின் பிரபு துவக்கிவைத்தார். அது ''இண்டியன் பிராட்-காஸ்டிங் சர்வீஸ்'' என்று வழங்கப்பட்டது. 8-6-1936ல் இந்தப் பெயர் மாற்றப்பட்டு 'ஆல் இண்டியா ரேடியோ' என்னும் பெயர் சூட்டப்பட்டது. 1939 மே மாதத்திற்குள் நாட்டில் 13 வானொலி நிலையங்கள் ஏற்பட்டன.

ஃ குழந்தைகளுக்கான மணி மலர் நிகழ்ச்சி, 1946-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. சிறுவர்களின் பொது அறிவு வளர்ச்சிக்கு இந்த நிகழ்ச்சி பெரிதும் உதவுகிறது. சிறுவர் பூங்கா, பிள்ளைக் கனியமுது என்று பிற குழந்தைகள் நிகழ்ச்சிகளும் ஏற்படுத்தப் பெற்றுள்ளன.

ஃ திருச்சி வானொலி நிலையத் துவக்க விழாவில் தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் சிறப்புரை நிகழ்த்தியது குறிப்பிடத் தக்கதாகும்.

ஃ திருச்சி தஞ்சாவூர், புதுக்கோட்டை, சேலம் ஆகிய நான்கு மாவட்டங்களுக்குத் திருச்சி வானொலி நிலையம் தனது நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது.

ஃ திருச்சியிலிருந்து மாநிலச் செய்திப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. இது தென் மாவட்டங்களுக்கு செய்திகளை முந்தித் தருகிறது. எல்லா நிலையங்களும் இதை அஞ்சல் செய்கின்றன. திருச்சி வானொலி நிலையத்தின் பொன்விழா 16-5-89 அன்று திருச்சியில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.


# சி. அ. சி. அழகப்ப செட்டியார்

கோட்டையூர் சி. அ. சி. அழகப்ப செட்டியார் அவர்கள் செய்கோன், அன்னேய் போன்ற நாடுகளில் வாழ்ந்தவர்கள். செய்கோனில் இந்தோ சைஞ நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தில் செயலாளராகவும் தலைவராகவும் தொண்டாற்றியவர்கள். செட்டி நாட்டரசர் ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார், 'தமிழ்க் கடல்' இராய. சொக்கலிங்கனுர் ஆகிய இருவரும் செய்கோன் சென்றிருந்தபோது சங்கத்தின் சார்பாக அவர்களுக்கு வரவேற்புக் கொடுத்தார்கள். இவர்கள் தங்கியிருந்த கிட்டங்கிக்கு (இருப்பிடம்) அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் வந்த போது அந்நாட்டின் சட்ட திட்டங்கள் பற்றி அவர்களுக்கு விளக்கி அவர்களது அன்பினைப் பெற்றவர்கள். பெட்டியடிப் பையனுகவோ அடுத்த ஆளாகவோ கைபழகாமல் நேரடியாக செய்கோனில் ஒரு கடையின் ஏஜெண்டாகப் பணியாற்றிய திறமைசாலி.

இவர்கள், சீர்திருத்தவாதி சொ. முருகப்பா அவர்களுடன் காரைக்குடி சிவனேசர் கூட்டத்தில் சேர்ந்து பனையப்பட்டி, நற்சாந்துபட்டி, குளிபிறை, கொப்பனுபட்டி போன்ற செட்டி நாட்டு ஊர்களில் ஜீவ காருண்யப் பிரசாரம் செய்தவர்கள்.

செய்கோனில் லேவாதேவித் தொழில் செய்த நம்மவர்கள் கூடி நம்மவர்களின் தொழில் பாதுகாப்புக்காக 'நகரத்தார் கமிட்டி' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தினுர்கள். நான்குபேர் கொண்ட அந்தக் கமிட்டியில் இவர்களும் இருந்தார்கள். (மற்ற மூவர் 1. வெ. வீர. நா. மு. சுப்பையா செட்டியார், உலகம் பட்டி 2. அ. உ. இராமசாமிச் செட்டியார், காரைக்குடி 3. பி. கு. நா. அண்ணுமலைச் செட்டியார், அமராவதி புதூர்) இந்தக் குழு தொழில்களில் ஏற்பட்ட தகராறுகளுக்கு, வழக்குகளுக்கு நியாயமாக நேர்மையாகச் செயல்பட்டு அவற்றைத் தீர்த்து வைத்தது.

கடந்த 44 ஆண்டுகளாக மதுரையில் இருந்து வரும் அழகப்ப செட்டியார் அவர்கள் சுந்தரம் ஃபைனன்ஸிற்கு அடுத்து Hire Purchase தொழிலைத்




தொடங்கினுர்கள். இன்றும் அத்தொழிலைச் செய்துவருகிறுர்கள்.

இவர்கள் சைவர்; தெய்வ பக்தி மிக்கவர்; எளிமையானவர்; எல்லாவற்றிற்கும் மேலாக தமது 81 வயதிலும் சோம்பலில்லாது 40 வயது இளைஞரைப் போல் சுறுசுறுப்பாகச் செயலாற்றி வருகிறுர்கள்.

இவர்களது துணைவியார் இப்போது இல்லை. இவர்களுக்கு இரண்டு பெண் மக்களும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

நேர்முகம் : எல். சுந்தரம்.



பள்ளத்தூர் ஏஎல். ஏஎன். சோலையப்ப செட்டியார் அவர்களது புதல்வனும் ஏ. பி. சிடி. அண்ணாமலை செட்டியார் அவர்களது சுவீகாரப் புதல்வனுமான செல்வன் இராமசாமி B. Com., க்கும் கண்டனூர் ஏஎல், பிஆர். அழகப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி மீனாட்சிக்கும் 21-6-89 அன்று கண்டனூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்தையொட்டி நமது இதழின் ஆசிரியர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களின் தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி முனைவர் திருமதி சரஸ்வதி இராமநாதன் திரு. சித. சிதம்பரம் திரு. ஆர். பாவாணன் பேராசிரியர் திரு. மா. கண்ணப்பன், புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் ஆகியோர் பேசினர்.

---

ஃ கும்பகோணம் நகரத்தார் அறக்கட்டளையின் சார்பாக இவ்வாண்டு இதுவரை நகரத்தார்களின் ஐந்து திருமணங்களுக்கு திருமணம் ஒன்றுக்கு ரூ. 1000/- வீதம் நன்கொடை அளிக்கப் பெற்றுள்ளது.

ஃ கும்பகோணம் நகரத்தார் சங்கத்தின் சார்பாக வழக்கம் போல் இவ்வாண்டும் நகரத்தார் சமூகக் குழந்தைகளுக்கு படிப்பிற்கும், சீருடைக்குமாக ரூ. 3000/- வரை உதவித் தொகை வழங்கப் பெற்றுள்ளது.

ஃ கும்பகோணம் நகரத்தார்கள் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையன்று நகரமடத்திற்குச் சொந்தமான நந்தவனத்தில் உழவாரப் பணி செய்து நந்தவனத்தைத் தூய்மையாக வைத்துள்ளனர்.

ஃ கும்பகோணம் நகரத்தார் அறக்கட்டளையின் சார்பாக 30-6-89 அன்று கும்பகோணத்திலுள்ள நகரத்தார்கள் கும்பகோணத்திலிருந்து சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமிக்கு பால் குடம் எடுத்துச் சென்று செலுத்தினர்கள்.

# வேலை வாய்ப்பில் நம்மவருக்கே உதவுங்கள்

உ. சண்முகநாதன் B. A.
கொல்லங்குடி அழகாபுரி

அரசியலிலிருந்து அலுவலகங்கள் வரை எங்கும் இன உணர்வு தலை தூக்கி உள்ளது. ஒவ்வொருவரும் அவரவர் இனத்தவருக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். நம் சமூகம் சிறு பான்மையான ஒரு கட்டுப்பாடான சமூகம். நம் இனத்தவர்கள் பல ஆலைகளை, தொழிற்சாலைகளை, தொழில்களை நிறுவி திறம்பட நடத்தி வருகிறார்கள். நம்மிடையே இருக்கும் ஒற்றுமையும், திறமையும், வேறு எவரிடத்திலும் இல்லை என்றே சொல்லலாம். பல தர்ம நிறுவனங்களை நாடெங்கிலும் ஏற்படுத்தி நல்ல முறையில் நடத்தி வருவதற்கு நமது ஒற்றுமையே காரணம். இந்த ஒற்றுமையை நாம் நம்மவர்களுக்கு வேலை அளிப்பதில் காட்டுவதில்லை. அப்படியே கொடுத்தாலும் பெரிய பதவிகளை அளிப்பதில்லை.

நம்மவர்கள் நடத்திவரும் பெரிய தொழிற்சாலைகளிலும் அதனைச் சார்ந்த அலுவலகங்களிலும் நம்மவர்களுக்கு வேலை அளிப்பதில் முன்னுரிமை காட்டப்படவில்லை. அந்தந்த வேலைகளுக்குத் தேவையான கல்வித் தகுதியும் திறமையும் நம்மவர்களிடையே இருந்தாலும் அந்த வேலைகளை நம்மவர்கட்குக் கொடுக்க முன்வருவதில்லை. அதற்குப் பல காரணங்களைச் சுட்டிக் காட்டலாம். (1) நம் தொழிலதிபர்கள் வேலைக்கு ஆள் தேர்வு செய்யும் பணியில் நேரிடையாகக் கலந்து கொள்வதில்லை. (2) நம்மவர்களுடைய தொழிற்சாலைகளில் பெரிய அதிகாரிகளாக இருப்பவர்கள் நம்மவர்களாக இருப்பதில்லை. (3) அரசு அலுவலகங்களில் உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள் அவர்களுடைய உறவினர்களுக்குக் கொடுக்கும்படி வற்புறுத்துவதால் நம்மவர்களுக்கு அந்தப் பெரிய பதவிகள் கிடைப்பதில்லை. (4) நம்மவர்களுடைய திறமையை நம்மினத் தொழிலதிபர்கள் குறைவாக மதிப்பிடுகிறார்கள். இந்த நிலை மாற நம் தொழிலதிபர்கள் நம் சமூகத்தைச் சேர்ந்தவர்களையே பெரிய பதவிகளில் நியமிக்க வேண்டும். வேலைக்கு ஆள் எடுக்கும் அதிகாரி நம்மவராக இருக்க வேண்டும். படித்தவர்கள் நேர்மையான அதிகாரிகள் திறமைசாலிகள் நம்மிடையே நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அனைத்து வேலைகளையும் நம்மவருக்கே உரியதாக்கி விட வேண்டும்.

நாம் முன்னேறிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள். நமக்கு வேறு இடங்களில் வேலை கிடைக்காது. சில தொழிலதிபர்கள் நம்மைப் பின்தங்கிய வகுப்பினராக்க விரும்பவில்லை. 'நாம் ஏன் பின்னோக்கிச் செல்ல வேண்டும்; முன்னோக்கியே செல்வோம்' என்ற கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். அப்படிக் கருதும் அவர்கள் அனைத்து வேலைகளையும் நம்மவர்க்கே கொடுத்து நாமும் முன்னேற, அவர்களும் முன்னேற வழி செய்யலாமே!

நம்மவரில் பல கல்லூரி நிறுவனர்கள், தொழிலதிபர்கள், ஆலை அதிபர்கள் நம்மவருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளித்து பலரின் வாழ்வை மலரச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு ஆயிரம் கோடி நன்றிகள். அவர்களைப் போல் மற்றவர்களும் இன உணர்வுடன் செயல்பட வேண்டும் என்பது தான் எனது ஆசை. என் ஆசை விரைவில் நிறைவேறும் என்று நம்புகிறேன்.



மதுரை 'ஹைகிளாஸ்' பாம்பே டையிங் துணிக்கடலை மதுரை மாநகர் டி. ஐ. ஜி திரு. செல்வராஜும் திரு. வெங்கடேஷ் சிவ ராமனும் திறந்து வைக்கின்றனர். (இடது) திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் முதல் விற்பனையைப் பெற்றுக் கொள்கிறார்.

## துணிக் கடல் திறப்பு விழா

தென்னகத்திலேயே மிகப் பெரிய துணிக் கடல் - 'ஹை கிளாஸ்' பாம்பே டையிங்- 10-5-89 அன்று மதுரை டவுன் ஹால் சாலையில் திறக்கப்பட்டுள் ளது. உன்னதமான வெளிநாட் டுப் பாணி அமைப்புள்ள கட்டி டத்தில் மதுரை மக்களின் நாக ரீக வளர்ச்சிக்கு எடுத்துக் காட் டாக இது அமைந்துள்ளது.

இந்த ஜவுளிக் கடலின் காட்சிக் கூடத்தை மதுரை மாநகர் டி. ஐ. ஜி. திரு. செல்வ ராஜும் சிவராம்ஸ் அஸோஸி யேட்ஸ் தலைமை நிர்வாகி திரு. வெங்கடேஷ் சிவராம னும் திறந்து வைத்தனர். திரு. செல்வராஜ் முதல் விற்பனையைத் துவக்கி வைக்க மதுரை அருள் மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் முன்னாள் தக் கார் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் முதல் விற்பனையைப் பெற்றுக் கொண்டார். திரு. வி. என். சிடியின் புதல்வி திரு மதி ஆனந்தி பெரியகருப்பன் திருவிளக்கேற்றிச் சிறப்பித்தார்.

திறப்பு விழாவிற்கு வந்திருந் தவர்களை 'ஹை கிளாஸ்-பாம்பே டையிங்' நிறுவன உரிமையாளர் கள் காரைக்குடி திரு. சுப. சுப்பிரமணியன் செட்டியாரும் அவரது புதல்வர் திரு. சுப. இராமசாமியும் மற்றும் திருமதி எஸ். சகுந்தலா ஆச்சியும் திரு மதி ஆர். லெட்சுமி ஆச்சியும் வரவேற்றார்கள்.

இவ்விழாவில் பாம்பே டையிங் விற்பனை அதிகாரிகள், திரு. கணபதி சுப்பிரமணியம், திரு. நாகராஜன் கோவை பிரைட் அட்வர்டைஸிங் மானே ஜர் திரு. மெர்வின் பெசல்வி பாம்பே டையிங் விளம்பர நிர் வாகி Duck (கண. சோம. சு. சிதம்பரம்) மற்றும் ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.




# வாழும் அரசு

மெ. அழகம்மை B.Sc., M. Ed.
மானகிரி

வாழும் அரசே! வைத்தாளும் பெட்டகமே!
எங்கள் குடிக்கரசே! எங்குடிக்கு நாயகனே!
தங்கள் குடிமங்காமல் தானாள வந்தகண்ணே!
கண்ணுமான் கண்ணே கவரிமான் பெற்றகண்ணே
புள்ளிமான் கண்ணே புத்திமான் பெற்றகண்ணே
பெற்றோர்க்கு முத்தே பெரியார்க்குப் பாற்குடமே
வல்லார் மகனோ வலியார் மருமகனோ
சொல்லாற் புகழடைக்கும் சோழருடைப் பேரரசோ

ஆறடைக்கும் கோரை அணையடைப்பார் நாட்டாரே
சபையடைக்க வார்த்தை சொல்லும் சமர்த்தருடைப் பேரரசோ!
ஊரடைக்க வார்த்தை சொல்லும் உத்தமனார் பெற்ற கண்ணோ
அண்ணாக்குந் தேனோ அடிநாக்கும் சர்க்கரையோ
உண்ணாக்கின் கீழே ஊறும் அமிழ்தமதோ
மாங்கனியோ தேங்கனியோ வருக்கைப் பலாக்கனியோ
கொம்புக்கனியோ கோறைபடா மாங்கனியோ
மல்லிகைப் பூவோ மருக்கொழுந்தோ சண்பகமோ

முல்லை நறுமலரோ முருகவிழ்க்கும் தாமரையோ!
நல்லம்மாள் கொல்லேயிலே புள்ளிமான் மேயுதென்று
விரட்டிப்பிடியும் என்றூர் வீரதண்டை தானசைய!
பார்த்துப் பிடியும் என்றூர் பாதரசம் தானசைய!
வம்புக்கோ நீயழுதாய் உன்வாயெல்லாம் தேனூற
தேனுந்தான் ஊறுதோ? உன்செல்ல வாய் நோவாதோ!
பாலுந்தான் ஊறுதோ உன்பவளவாய் நோவாதோ!

# பன்னிருகை வேலவரோ!

பார்வதியாள் பாலகரோ
பன்னிருகை வேலவரோ!
பூமணக்கும் புண்ணியரோ
புகழ்மணக்கும் கண்ணியரோ
நாமணக்கும் நல்லவரோ
நானிலத்தில் வல்லவரோ
தேவர்களைக் காத்தவரோ
தேவமகள் நாயகரோ
செப்பரிய நூலுரையோ
செந்தமிழாய் வந்தவரோ
நென்மலையோ பொன்மலையோ
நெஞ்சினிக்கும் பூமழையோ
வளர்பிறையாய் வந்தவரோ
வண்ணமகன் கண்வளராய்!
சிட்டு நடையழகோ
சிறுகுருவித் தலையழகோ
பட்டு நிறத்தழகோ
பவளமே கண்வளராய்!
பாவலனே கண்வளராய்!
பாலகனே கண்வளராய்!

— கவிஞர் கரு. கருப்பையா
கண்டரமாணிக்கம்

## குடநீராட்டு மலர் வெளியீட்டு விழா

நாட்டரசன்கோட்டை அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மன் கோயில் திருக்குட நன்னீராட்டு, மலர் வெளியீட்டு விழா 14-6-89 அன்று திருப்பணிக் குழுத் தலைவர் ஞா. ஆறுமுகம் செட்டியார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

திரு. குப. சொக்கலிங்கம் இறைவணக்கம் பாட பேராசிரியர் திரு. சுப. இராமநாதன் செட்டியார் வரவேற்றார். சிவஸ்ரீ தத்புருஷதேசிகர் (பாலகவி) அவர்கள் மலரின் முதல் பிரதியை வெளியிட திரு. ச. கண்ணப்ப செட்டியார் அதனைப் பெற்றுக் கொண்டார்.

ஆடிட்டர் திரு. ஏ. சத்தியமூர்த்தி, பேராசிரியர் திரு. இராம. சிவசுப்பிரமணியன், திரு. சோம. வெள்ளையப்பன், திரு. சே. நாராயணன் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன், திருக்கோயிலின் கண்காணிப்பாளர் திரு. கண. இராமசாமிச் செட்டியார் ஆகியோர் உரையாற்றினர். திருப்பணிக் குழுச் செயலாளர் திரு. உ. கருப்பையா செட்டியார் நன்றி கூறினார்.

## நகரமும் சிகரமும்

'நமசிவாயா' எனும் சொல்லில் நகரத்தார் இனத்தின் உயர்வு உள்ளது. ஆம் 'நம' என்பதில் நகரமும் 'சிவா' என்பதில் சிகரமும் உள்ளது. 'நமசிவாயா' எனும் மந்திரத்தில் 'நகரத்தார் சிகரமாவார்' எனும் குறிப்பு உள்ளடங்கி உள்ளது.

— புலவர் மாமணி
மா. முத்துராமன்

(வலையபட்டியில் 18-5-89 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில்)

## மண்டலாபிஷேகமும் மலர் வெளியீட்டு விழாவும்

நாட்டரசன்கோட்டை தீர்த்தார் குளம் தேசிக விநாயகர் கோயிலின் மண்டலாபிஷேக விழா 14-6-89 அன்று சிறப்பாக நிகழ்ந்தது. அப்போது நடைபெற்ற திருக்குட நன்னீராட்டு மலர் வெளியீட்டு விழாவிற்கு 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் தலைமை தாங்கி மலரை வெளியிட்டார். பேராசிரியர் திரு. இராம. சிவசுப்பிரமணியன் வரவேற்றுப் பேசினர். முதல் மலரை திரு. வயி. சோம. சுந்தரம் செட்டியார் பெற்றுக் கொண்டார். திரு. சுப. ராம. லெ. இராமகிருஷ்ணன் செட்டியார் திரு. மெ. நடராஜன் செட்டியார் பேராசிரியர் திரு. சுப. இராமநாதன் செட்டியார் திரு. குப. சொக்கலிங்கம் ஆகியோர் உரையாற்றினர். திரு. லெ. கண்ணப்ப செட்டியார் நன்றி கூறினர்.

## திருமணம்

திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் தலைவரும் அரிமா 324-B மாவட்டத் தலைவரும் நெல்லை மாவட்ட பூப்பந்துக் கழக இணைச் செயலாளருமான காரைக்குடியைச் சேர்ந்த ஆவி. ப. முரு. பழ. முருகப்பன் அவர்களின் புதல்வன் செல்வன் பழநியப்பன் B. Com க்கும் காரைக்குடி எஸ் பி. எஸ். ஆர் எம். எஸ்பி. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி நாச்சம்மை என்ற தேனம்மை B. Com க்கும் 25-5-89 அன்று காரைக்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

# எனது சங்கீத அனுபவம்

## - பனையப்பட்டி வினைதீர்த்தான் செட்டியார் -

(இக்கட்டுரையாளர் பனையப்பட்டி வி. கா. வினைதீர்த்தான் செட்டியார் அவர்கள் நல்ல சங்கீத வித்வான். இரணிக்கோயிலைச் சேர்ந்தவர்கள். இலங்கையில் பல ஆண்டுகள் நகைக் கடை நடத்தியவர்கள். அவர்கள் இப்போது நம்மிடையே இல்லை. 1942ல் ''கல்கி'' மலரில் அவர்கள் எழுதிய இக்கட்டுரையை மீண்டும் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.)

என் தந்தையார் தமிழினிடத்து மிகுந்த பிரியமுடையவர்கள். திருவிளையாடற் புராணம், பாரதம், கம்பஇராமாயணம் என்றால் அவர்களுக்கு உயிர். என்னையும் படிக்கும்படி வற்புறுத்துவார்கள். எனக்கு அவற்றில் அப்பொழுது விருப்பமில்லை என்பதைத் தெரிந்தும், விடுவதாயில்லை. ஒரு பாட்டுப் பாடம் செய்தால் ஒரு அணு தருவதாகவும் ஒரே நாளில் எத்தனை பாட்டுப் பாடம் செய்தாலும் அத்தனை அணு தருவதாகவும் ஒப்பந்தம் பேசினார்கள். பணத்திற்காகவும் அவர்கள் பயமுறுத்தலுக்காகவும் வேண்டா வெறுப்பாகப் பாடம் பண்ணினேனே தவிர—

''மோட்டாரு வண்டிபோலே
ஓட்டுவேன் தங்கச்சாமி
நாட்டாரே நீங்க ளேறுங்க-என் குதிரைக்கு
மகிழம்பூ ஆரம் போடுங்க''

என்பது போன்ற எளிய நடையிலுள்ள நாட்டுப் பாடல்களைத்தான் நான் அடிக்கடி பாடுவேன். அத்துடன் இசைத் தட்டுக்களையும் வைத்து அதுபோல் பாடுவேன்.

சுமார் 10 வருஷங்களுக்கு முன் காரைக்குடியில் ஸ்ரீ எஸ். வி. சுப்பையா பாகவதரும் ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாளும் நந்தனார் நாடகத்தில் நடித்தார்கள். நானும் சென்றிருந்தேன். ஏகக் கூட்டம். அதில் என் பணப்பை திருட்டுப் போய்விட்டது. நானும் என் உடன்வந்த நண்பரும் அன்றிரவு ஒரு மடத்தில் படுத்திருந்தோம். எங்கள் கையிருப்பு அணு ஒன்றரைதான். காலையில் ஸ்வல்பமாக ஆகாரத்தை முடித்துக் கொண்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்து சேர்ந்தோம்

''பஸ்ஸுக்குப் பணம் கிடையாதே; உங்களிடமுள்ள வைர மோதிரத்தில் ஒன்றை அடகு வைத்துப் பணம்வாங்கி ஊர்போய்ச் சேர்ந்து மீட்டுக் கொள்வோம்'' என்று என் நண்பர் யோசனை கூறினார். எனக்கு அது சம்மதமில்லை. காரைக்குடியில் அப்பொழுது எனக்கு ஒருவரையும் தெரியாது. ''புதுக்கோட்டைக்கு பஸ்ஸில் போய் அங்கே பணம் வாங்கிக் கொடுப்போம்'' என்று நண்பரைச் சமாதானம் செய்தேன். என்னுடன் வந்தவர் ஒரு பாட்டுப் பைத்தியம். ''பஸ் புறப்பட நேரம் ஆகும்; அதுவரை நீங்கள் பாடுங்கள்; கேட்போம்'' என்றார். மெதுவாக நான் ஒரு பாட்டுப் பாடினேன். பஸ் டிரைவர்களும் கண்டக்டர்களும் சூழ்ந்து கொண்டு ''எங்கே சார் இன்னொரு பாட்டுப் பாடுங்கள்'' என்றார்கள். எனக்கு மிகுந்த லஜ்ஜையாக இருந்தது. பாடுவதற்கு மறுத்தேன். அவர்கள் ''பாடினால் தான் பஸ்ஸில்

ஏற்றிக் கொள்வோம்'' என்று பிடிவாதம் செய்தார்கள்.

பின்னர் என் நண்பர் என்னை வற்புறுத்திப் பாடச் சொன்னார். அவர்கள் இஷ்டம்போல், கேட்ட பாட்டுக்களைப் பாடினேன். (எல்லாம் இசைத் தட்டில் வந்தவைகளும் நாட்டுப் பாடல்களும்தான்) அவர்கள் மிகுந்த சந்தோஷப்பட்டு மத்தியானச் சாப்பாடு, சாயந்திரம் காபி எல்லாம் அவர்கள் செலவிலேயே செய்து வைத்தார்கள். நாங்கள் எவ்வளவோ மறுத்தும் கேட்கவில்லை. நமன சமுத்திரம் வரை எங்களை, காசு வாங்காமல் பஸ்ஸில் ஏற்றிக்கொண்டு வந்ததல்லாமல் எங்கள் ஊருக்குப் போய்ச்சேர பஸ்ஸுக்குப் பணமும் கூடத் தந்து அனுப்பினார்கள்.

இந்தச் சம்பவத்திலிருந்து ஏதாவது ஒரு சங்கீதத் தொழிலை ஆத்மார்த்தமாகத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று நினைத்தேன். நாதஸ்வரம், ஹரிகதை, பாட்டுக் கச்சேரி இவைகளில் எதைக் கற்றுக்கொள்ளலாமென்று என் மனத்துள் பலத்த போராட்டம் நடந்தது. முடிவில் பாட்டுக் கச்சேரி செய்யக் கற்றுக் கொள்வதென்று முடிவுக்கு வந்தேன்.

பின்னர் காரைக்குடியில் அரியக்குடி ஸ்ரீ ராமனுஜ அய்யங்காரவர்களிடம் சென்று என் விருப்பத்தைத் தெரிவித்ததும் அவர்கள் மனமுவந்து சொல்லித் தருவதாகவும் ஜாகை வசதி செய்து கொடுப்பதாகவும், நல்ல நாள் பார்த்துத் தாமே சொல்லி அனுப்புவதாகவும், தெரிவித்து அவ்விதமே சொல்லி அனுப்பினார்கள்.

நான் பாட்டுக் கற்றுக் கொள்ளப்போகிறேன். என்ற விஷயம் தெரிந்ததும் எனது நண்பர்கள், தாயார், மனைவி எல்லோருக்கும் அது கட்டோடு பிடிக்கவில்லை. வீட்டில் தினம் யுத்தந்தான்! வாயில்லாத பாத்திர பண்டங்கள் பட்ட பாட்டைப் பார்க்க வேண்டுமே! ''உனக்கு இருபத்தி இரண்டு வயது ஆகிவிட்டது. இதற்குமேல் சங்கீதம் வருமா? பணத்தைச் செலவு பண்ணினாலும் வருகிறது தானே வரும்? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?'' என்று இன்னும் பலவிதமாக அவர்கள் வெறுப்பைத் தெரிவித்தார்கள்.

குறித்த தேதியன்று அதாவது 8-12-32ல் காரைக்குடி போய்ச் சேர்ந்தேன். ஸரளி வரிசை ஆரம்பித்ததும் ''சின்னப் பையன் மாதிரி ஸரிகம சொல்லிக் கொடுக்கிறீர்களே; பாட்டையே ஆரம்பித்துச் சொல்லிக் கொடுங்கள்'' என்றேன் அதற்கு ஸ்ரீ இராமனுஜ அய்யங்காரவர்கள் வரிசைக்கிரமமாய்த்தான் போக வேண்டும் எனச் சொல்லிப் பாடியும் காண்பித்தார்கள். சங்கீதத்துக்கு முற்றிலும் நான் புதிதாகையால் கைநுகி நிஷாதத்திற்கும் காகலி நிஷாதத்திற்கும் வித்யாசம் தெரியாமல் திண்டாடினேன். அய்யங்கார் அவர்கள் மிகப் பொறுமையோடு சொல்லிக் கொடுத்தார்கள்

வாசனைப் பாக்கு, சிகரெட், சுருட்டு ஆகியவற்றை நான் உபயோகிப்பதுண்டு. இது தெரிந்த அவர்கள் ''இது மூன்றையும் விட்டுவிட வேண்டும்; அல்லது சங்கீதத்தை விட்டுவிடவேண்டும். இதில் எது இஷ்டம் என்பது தெரிந்தால்தான் மேலே பாடம் ஆரம்பிப்பேன்'' என்றார்கள். ''நான் இம் மூன்றையும் இனி எப்பொழுதுமே உபயோகிப்பதில்லை'' என்று வாக்குக் கொடுத்ததும் பாடம் தொடர்ந்து நடந்தது. அவர்கள் ஊரில் இல்லாதபோது அவர்கள் மைத்துனர் ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யங்காரவர்கள் பாடம் சொல்வார்கள்.

சில நாட்களுக்குப்பின் இரங்கூன் போகவேண்டிய அவசியத்தை முன்னிட்டு ஊர் வந்து சேர்ந்தேன். சில அசௌகரியங்களால் பல மாதங்கள் வரை சங்கீத பாடம் தொடர்ச்சியாக நடைபெறவில்லை. சௌகரியப் பட்டபோது மாதம் நாற்பது, ஐம்பது ரூபாய் சம்பளத்தில் வீட்டிலேயே இரண்டொருவரைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு பாடம் கற்றுக் கொண்டேன் வாத்தியாருக்குப் பயந்த சிஷ்யனாக இருந்தால் பாடம் ஒழுங்காக நடக்கும். சிஷ்யனுக்குக் கட்டுப்பட்ட வாத்தியார்களே வாய்த்தபடியால் பாடம் சரியாக வரவில்லை. இந்த லட்சணத்தில் கொஞ்சம் மேல்ஸ்தாயியில் பாடினால் போதும் ''எதுக்காக இப்படித் தொண்டை கிழியக் கத்துகிறது! இது என்ன மேளக்காரர் வீடா?'' என்று ஒருகுரல் கேட்கும். காலை நான்கு மணிக்கு அகாரசாதகம் செய்வது—ஜன்னலே இல்லாத உள் வீட்டில்தான். இதற்கும் சிலசமயங்களில் எதிர்ப்பு உண்டு. 'இவர்களைச் சொல்வதில் என்ன பயன்? அவர்களுக்கு முற்றிலும் புதியது நம் விஷயம்' என்று என்னை நானே சமாதானம் செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

பின்னர் இரண்டாம் முறையாகப் படை எடுத்து 1934ம் வருஷம் ஜூன் மாதத்திலிருந்து புதுக்கோட்டையில் திருவையாறு ஸ்ரீ சுப்பையா பிள்ளை அவர்களிடம் பாடம் கேட்கத் தொடங்கினேன். எனது நெருங்கிய நண்பர்கள் கூடத் தமது ஆட்சேபணையைத் தெரிவித்தார்கள். பொதுவாக நகரத்தார்களிடம் ஒருபழக்கம் இருப்பதை என் அனுபவ வாயிலாகக் கண்டேன். ஒருவன் புதிதாக ஒரு துறையில் இறங்கினால் ஆரம்பத்தில் அவனுக்கு ஊக்கமளிப்பதற்குப் பதிலாக பேதிக்கு மாத்திரை தான் கொடுப்பார்கள். அவன் அந்தச் சோதனையில் வெற்றி பெற்றால் அதற்கு வட்டியும் முதலுமாகச் செலுத்தி விடுவார்கள்.

நான் புதுக்கோட்டைக்கு வந்து கொஞ்ச நாளானதும் என் தாயாரைச் சந்திக்க நேர்ந்தது. அவர்கள் ''ஏன் ராமய்யா (அவர்கள் என்னை இந்தப் பெயரால் தான் அழைப்பார்கள்) சங்கீதத்துக்காக ஆயிரக்கணக்காக செலவு செய்கிறாயே, அதிலே ஒரு நூறு ரூபாயாவது உன்னால் சம்பாதிக்க முடியுமா?'' என்றார்கள். அன்று வரை கச்சேரி செய்து பணம் வாங்க வேண்டுமென்று நான் நினைத்ததுகூட இல்லை. அன்றே என் தீர்மானத்தை மாற்றிக் கச்சேரி செய்து பணம் சம்பாதிப்பது என்று அவர்கள் முன்னிலையில் சபதம் செய்தேன்.

சங்கீத சபா காரியதரிசி ஸ்ரீ டி. எஸ். ரெங்கசாமி அய்யரவர்கள் வீட்டில் தான் நான் தங்கி வந்தேன். அங்கு வந்த சென்னை கீர்த்தன ஆச்சாரியார் ஸ்ரீ ஸி. ஆர். சீனிவாச அய்யங்காரவர்கள் என்னை இரண்டு உருப்படிகள் பாடும்படி கூறினார்கள். நான் பாடியதும் ''உங்கள் ஜாதியாரில் இவ்வளவு தூரம் வருவது மிக அருமை. உனக்கு நன்றாகச் சங்கீதம் வரும். ஆசையும் இருக்கு. உன் சாரீரம் செம்மங்குடி ஸ்ரீனிவாச அய்யருடையது போன்று உள்ளது. நீ அவரிடம் கொஞ்ச நாள் இருந்து வா'' என்றார்கள். உள்ளூற எனக்கும் அந்த ஆசை இருந்தது. எனக்கு செம்மங்குடியின் பாட்டு என்றால் உயிர்; அவர் கச்சேரி எங்கு நடந்தாலும் நான் போகாமலிருக்க மாட்டேன்.

மிருதங்க வித்வான் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளையவர்கள் வீட்டுக் கிரகப்பிரவேசத்தில் ஸ்ரீ ஸ்ரீநிவாச அய்யரவர்கள் பாட்டுக் கச்சேரி நடந்தது. 'என்று தணியும்' என்ற பாரதியார் பாடலைப் பாடும்படி நான் அவரை வேண்டி

னேன். அதற்கு ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யர் ''நீர் முழுதும் சில்க் ஆடைகளையே அணிந்து கொண்டு பாரதியார் பாடலைப் பாடச் சொல்கிறீரே 'நாளை முதல் கதர்க் கட்டுகிறேன்' என்று சொல்லும் பாடுகிறேன்'' என்றதும் நான் ''சரி'' என்றேன் அவர்கள் மிக மிக உருக்கமாகப் பாடினார்கள். அன்று முதல் கதரே கட்டி வருகிறேன்.

மூன்றும் முறையாகப் படை எடுத்து 1935ம் வருஷம் நவம்பர் மாதம் கும்பகோணத்தில் ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீனிவாச அய்யரவர்களிடம் சிஷ்யனாகப் போய்ச் சேர்ந்தேன். அவர்களும் உமையாள்புரம் ஸ்ரீ கல்யாண ராமய்யரவர்களும் பாடம் சொல்லிவந்தார்கள். இருவரும் அவர்கள் குடும்பத்தில் என்னை ஒருவனாகவே எண்ணி அன்பு பாராட்டி ஆதரவுகாட்டி வந்ததற்கு நான் என்றும் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஒரு சமயம் என்னுடனிருந்தவர்களுக்கு ஒரு தமிழ் உருப்படி பாடம் நடந்தது. அதைக் கேள்வி மூலமாகவே பாடினேன், மறைவிலிருந்து கேட்ட ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யரவர்கள் ஸ்ரீ கல்யாண ராமய்யரவர்களிடம் ''இன்னும் இரண்டு வருடத்துக்குள் நம்ம 'வீணா' (என்னை அவ்விதம்தான் அழைப்பார்கள்) கச்சேரி செய்வார்'' எனச் சொன்னார்கள் ஓழிந்த நேரங்களில் ஸ்ரீ நயினாப்பிள்ளையவர்கள் பாடுவது போல் ஜாதி பேதம் செய்து ஸ்வரம் பாடுவதற்கும் ஸ்ரீ செம்பையவர்கள் பாடும் மேக கால ஸ்வரம் பாடுவதற்கும் அப்பியாசம் செய்து வந்தேன்.

தஞ்சாவூர் ஸ்ரீ கணேசய்யரவர்கள் வீட்டில் 1936 ஆம் வருஷம் ஜனவரி மாதம் 3ஆம் தேதியன்று வேடிக்கையாகப் பாடினேன். முதலில் மிருதங்க வித்வான் ஸ்ரீ வைத்தியநாத அய்யரவர்களும் பின்னர் பாலக்காடு ஸ்ரீ மணி அய்யரவர்களும் கெஞ்சிரா வாசித்தார்கள். முடிவில் ஸ்ரீமணி அய்யர் மிகவும் சந்தோஷத்தோடு அந்த வருஷம் காங்கிரஸ் சங்கீத விழாவில் தமக்குக் கிடைத்த சரிகை மாலையை எனக்குச் சன்மானமாகத் தந்தார். எனக்குக் கிடைத்த முதல் சன்மானத்தை இன்னும் பத்திரப்படுத்தி வைத்துள்ளேன்.

ஸ்ரீ ''கர்நாடகம்'' எழுதும் ஆடல் பாடல் பகுதிகளை முழுவதும் வாசித்துப் பத்திரப்படுத்துவதோடல்லாமல் கூடியவரை நடை முறையில் கொண்டுவந்ததால் என் கச்சேரிகள் மிக மிக வெற்றிகரமாக நடந்திருக்கின்றன என்பதற்கு எத்தனையோ அத்தாட்சிகள் கூறமுடியும். உதாரணமாக 1937ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 8ம் தேதி ஆடல் பாடலில் 'ஆசை முகம் மறந்து போச்சே' என்ற இசைத் தட்டுக்கு விமர்சனம் வெளிவந்தது. அதில் 'கண்ணன் முகம் மறந்து போனால்' என்னும் அடி விடப்பட்டதை எடுத்துக் காட்டியிருந்தது. அதற்குப் பிறகு நான் செய்த கச்சேரியில் 'கண்ணன் முகம் மறந்து போனால் இந்தக் கண்கள் இருந்து பயனுண்டோ' என்ற அடியைப் பாடியதும் சதஸில் என்ன உத்சாக ஆரவாரம்! ஒரே கரகோஷம்தான்.

நான் சங்கீதத்தைத் தொழிலாக வைத்துக் கொள்ளவில்லை. சங்கீதத்தில் நமக்குத் தெரிந்தது மிக சொல்பம். இன்னும் நன்கு தெரிந்து கொள்ள வேணும் என்ற நோக்கமுள்ளவனாக இருக்கிறேன்.

வெற்றி சொலுக் குண்டு
விதியின் நியமமென்று
கற்றுத் தெளிந்த பின்னும்—கிளியே
கவலைப் படலாகுமோ?

நன்றி : ''கல்கி'' தீபாவளி மலர் - 1942

## பரங்குன்றத்துக்குப் பால் குடங்களும காவடிகளும்

வருகிற ஆவணி மீ 8 உ (24-8-89) வியாழக்கிழமை காலே 5-30 மணிக்கு பால் குடங்கள் கட்டி 8-00 மணிக்கு பால் குடங்களும் காவடிகளும் நகரவிடுதியிலிருந்து எடுத்துச் சென்று 10-00 மணி அளவில் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிக்குச் செலுத்தப் பெறும் என்றும் அதனை ஒட்டிய எல்லா நிகழ்ச்சிகளிலும் நகரத்தார் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறும் மதுரை நகரத்தார் சங்கத்தின் செயலாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### நிகழ்ச்சி விவரம்

ஆவணி மீ 7 உ (23-8-89) புதன்கிழமை காவடி கட்டுதல்.

மாலே 6 மணிக்கு விநாயகப் பானே வைத்தலும் பக்திப்பாடல்கள் பாடுவதும்.

இரவு 8மணிக்கு தீபாராதனே.

ஆவணி மீ 8 உ (24-8-89) வியாழக்கிழமை காலே 5-30 மணிக்கு பால்குடங்கள் கட்டுதல்

காலே 8 மணிக்கு பால்குடங்கள் காவடிகளுடன் பக்தர்கள் திருப்பரங்குன்றம் புறப்படுதல்.

காலே 10 மணிக்கு காவடிகள் பால்குடங்கள் செலுத்துதல்.

காலே 11 மணிக்கு திருப்பரங்குன்றம் விடுதியில் மகேஸ்வர பூஜை.

---

ஆடி மீ 9 உ (24-7-89) மாலே 6-30 மணி அளவில் பொதுக்காவடி எடுக்கச் சீட்டுக் குலுக்கப் பெறும்.

---

## வெங்காய மகிமை!

ஃ நேபாள மக்கள் கடவுளுக்குக் காணிக்கையாக வெங்காயத்தைப் படைக்கிறார்கள்.

ஃ கல் நெஞ்சர்களேயும் கண் கலங்க வைக்கும் ஆற்றல் வெங்காயத்திற்கு உண்டு.

ஃ நாம் வெற்றிலேயை வைத்துச் சத்தியம் செய்வது போல் எகிப்தியர்கள் வெங்காயத்தை வைத்துச் சத்தியம் செய்கிறார்கள்.

ஃ பச்சை வெங்காயத்திற்கு காச நோயைப் போக்கும் ஆற்றல் உண்டு.

ஃ வெங்காயத்தில் புரதச் சத்துக்களும் தாது உப்புக்களும் வைட்டமின்களும் கணிசமான அளவில் உள்ளன.

ஃ ரோம் நகரம் எரிந்தபோது பிடில் வாசித்துப் புகழ் பெற்ற நீரோ மன்னன் தன் குரல் இனிமைக்காக வெங்காயச் சாற்றினைச் சாப்பிட்டு வந்தான்.

''வெங்காய வைத்தியம்''
என்ற நூலிலிருந்து

## பர்மாவின் பெயர் 'மியான்மார்' என மாற்றம்

பர்மா நாட்டின் பெயற் 'மியான்மார்' என அதிகாரப் பூர்வமாக மாற்றம் செய்யப் பட்டுள்ளது. அது ஆங்கிலத்தில் 'யூனியன் ஆப் மியான்மார்' என அழைக்கப்படும். தலேநகரான இரங்கூனின் பெயர் 'யங்கோன்' என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்தகவலே பர்மிய அரசு நடத்தும் 'உழைக்கும் மக்கள் தினசரி' தெரிவித்துள்ளது. இதற்கான புதிய சட்டமொன்றை இராணுவ அரசு பிறப்பித்துள்ளது. பர்மா, பர்மியர்கள் என்ற சொற்கள் இனிமேல் 'மியான்மார்' என்று உச்சரிக்கப்படும்.

## மதுரை வானொலி நடத்திய வழக்காடு மன்றம்

மதுரை வானொலி நிலையம், வானொலி நேயர்கள் முன்னிலையில் 15-5-89 அன்று மதுரை சித்தாஸ்ரம வளாகத்தில் ஒரு வழக்காடு மன்றத்தை நடத்தியது. தலைப்பு: ''சமுதாய மறுமலர்ச்சிக்குத் துணை செய்யாத திரைப்படம் குற்ற முடையது'' என்பதாகும். விருதுநகர் திரிவேணி இராதாகிருஷ்ணன் வழக்குத் தொடுக்க கவிஞர் சேது. அருணாசலம் எதிர் வழக்காடினர். நடுவர் திரு. கு. துரைராசு 'குற்ற முடையதே' எனத் தீர்ப்பு வழங்கினர்.

## பட்டி மண்டபம்

கல்லலை அடுத்துள்ள கல்லங்குடி புதூரில் 24-6-89 அன்று ''சமுதாய நலம் பேணுவதில் பெரும் பங்கு ஆண்களுக்கா, பெண்களுக்கா'' என்ற தலைப்பில் பட்டி மண்டபம் நிகழந்தது. 'ஆண்களுக்கே' என்ற அணியில் திரு. மீனு மணாளனும் திரு. கலைச் செல்வனும் 'பெண்களுக்கே' என்ற அணியில் திரு. மாரியப்பனும் திருமதி வசந்தாவும் வாதிட்டார்கள், நடுவர் கவிஞர் திரு. சேது அருணாசலம் 'ஆண்களுக்கே' என்று தீர்ப்பு வழங்கினர்.

## இயற்கை எய்தினர்

மதுரை நகர விடுதி மேலாளர் காரைக்குடி சிவ. கி. நா. ராம. நா. கோவிந்தன் செட்டியார் அவர்களது துணைவியார் திருமதி மெய்யம்மை ஆச்சி அவர்கள் தமது 70 ஆவது வயதில் 7-6-89 அன்று காரைக்குடியில் இயற்கை எய்தினர்கள். தெய்வபக்தி மிக்க அவர்களது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம். அவர்களுக்குக் கணவரும் இராமசாமிச் செட்டியார், திருநாவுக்கரசு என இரு புதல்வர்களும் 5 பேரன்களும் உள்ளனர்.

## காரைக்குடியில் வழக்காடு மன்றம்

காரைக்குடி கொப்புடையம்மன் தெப்ப உற்சவத்தை முன்னிட்டு 11-5-89 அன்று ''இராம காதையின் ஏற்றத்திற்குக் காரணம் சிறையிருந்த சீதையே என்பது குற்றம்'' எனும் தலைப்பில் வழக்காடுமன்றம் நடைபெற்றது. புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் நடுவர் பொறுப்பேற்றார். நிர்வாக அதிகாரி மீனாட்சி சுந்தரம் வரவேற்றார். முனைவர் கரு. முத்தையா வழக்குத் தொடுத்தார். முனைவர் பழ. முத்தப்பன் எதிர் வழக்காடினார். ''சீதை குற்றவாளி அல்லள்'' என்று நடுவர் புலவர் மாமணி தீர்ப்பு வழங்கினர்.

## மகேஸ்வர பூஜை

நகரத்தார் மகேஸ்வர பூஜை பரிபாலன சபையின் சார்பாக 16ஆம் ஆண்டு மகேஸ்வர பூஜை 13-8-89 அன்று சென்னை அம்பத்தூர் டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை கோயில் மண்டபத்தில் பழநி அருளாடியார் கண்டனூர் பழநியப்ப செட்டியார் அவர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

13-8-89 ஞாயிறன்று அதிகாலை 3-00 மணிக்கு விநாயகப் பானை வைத்தல். 6-00 மணிக்கு வேல் அழைத்து வரல். 7-00 மணிக்கு பிள்ளைப் பானை வைத்தல். 8-00 மணிக்கு வேல் அபிஷேக அலங்காரம். 11-00 மணிக்கு தீபாராதனை. பகல் 12-00 மணிக்கு அன்னம் பாலித்தல். மாலை 2-00 மணிக்கு ஏலம். 6-00 மணிக்கு பானக பூஜை. 6-30 மணிக்கு வேல் திரும்ப எடுத்துச் செல்லுதல்.



பள்ளத்தூர் நெ. நெ. வயிரவன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் அருணாசலம் B. Com. A. C. A. க்கும் (Asst. Administrative Officer, National Insurance Co. Ltd., Indur, M. P.) கண்டனூர் வயி. ராம. நா. சித. நாகப்ப செட்டியார் அவர்கள் பேத்தியும் நா. நாச்சியப்ப செட்டியார் அவர்களது புதல்வியுமான செல்வி வள்ளியம்மை M. A. க்கும் கண்டனூரில் 14-6-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

---

## உங்களுக்குத் தெரியுமா?

தொகுப்பு;
அண. அண்ணாமலை

ஃ காரட்டிற்கு தோல் புற்று நோயைக் குணப்படுத்தும் சக்தி உள்ளது என்று ஆஸ்திரேலியா மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஃ இந்தியாவிலே குறைந்த அளவு நீரைப் பயன்படுத்துவது சென்னைவாழ் மக்களே. இங்கு ஒரு மனிதர் ஒரு நாளைக்குச் சராசரியாக 70 லிட்டர் தண்ணீரை மட்டுமே பயன்படுத்துகிறார்.

ஃ உலகில் தினமும் பட்டினியால் நாற்பது ஆயிரம் குழந்தைகள் இறப்பதாக உலக வங்கியின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஃ சென்னை நகரம் கடல் மட்டத்திற்கு மேல் 25 அடி உயரத்தில் உள்ளது.

ஃ லியோ டால்ஸ்டாய் என்னும் அறிஞர் தான். முதன் முதலில் டைப் ரைட்டர் உதவியுடன் நாவல் எழுதினார்.

## காரைக்குடியில் நிழற் குடைத் திறப்பு விழா

காரைக்குடி இன்னர்வீல் கிளப்பின் சார்பில் 7-6-89 அன்று மாலை காரைக்குடி பாண்டியன் தியேட்டர் எதிரில் பயணிகள் நிழற் குடையும் இராமசாமிச் செட்டியார் தெருவில் குடிநீர்க் குழாயும் காரைக்குடி நகர் மன்றத் தலைவர் திரு. சித. சிதம்பரம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேற்கண்டவற்றின் மொத்தச் செலவு மதிப்பீடு ரூ. 9,000 - இவ்விழாவின் சிறப்புக் கூட்டம் இன்னர்வீல் கிளப் தலைவர் டாக்டர் அலைஸ் செல்லப்பா தலைமையில் கம்பன் மணிமண்டபத்தில் நடைபெற்றது. அகல்யாராகவன் சங்க வணக்கப் பாடலைப் பாடினார். செயலர் நாச்சம்மை கருப்பஞ்செட்டி அறிக்கை வாசித்தபின் நகர் மன்றத் தலைவர் சித. சிதம்பரம் சிறப்புரை ஆற்றினார். சுழற்குழுத் தலைவர் டாக்டர் செல்லப்பாவும் முன்னாள் தலைடர் திருநாவுக்கரசும் வாழ்த்துரை வழங்கினார்கள். நினைவுப் பரிசை திரு. சித. சிதம்பரத்திற்கு ஜானகி கதிர்வேல் வழங்கினார். வசந்தாள் சுந்தரம் நன்றி கூறினர்.

## குருபூஜை

காளையார் கோவில் வேதாந்த மடாலயத்தைச் சேர்ந்த தவத்திரு செல்லப்ப ஞான தேசிக சுவாமிகளின் 67 ஆவது குரு பூஜை சுக்கில ஆண்டு ஆடிமாதம் 9 ஆம் நாள் (24-7-89) திங்கட்கிழமை ரேவதி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் நடைபெற இருக்கிறது.

## திருமணம்

இராங்கியம் ஆ. அண. முத்துக்கருப்பன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் முத்துக்கருப்பன் B Com க்கும் கீழச்சிவல்பட்டி கரு. சே. ம. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி அழகம்மை என்ற கல்யாணி B. Com க்கும் கீழச்சிவல்பட்டியில 19-6-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத்தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001 லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்

# நகரத்தார் குரல்

## விளம்பர விவரம்

| | | |
|---|---|---|
| அட்டை (வெளிப் பக்கம்) | ரூ. | 500-00 |
| அட்டை (உள் பக்கம்) | ரூ. | 300-00 |
| முழுப் பக்கம் | ரூ. | 150-00 |
| அரைப் பக்கம் | ரூ. | 75-00 |
| கால் பக்கம் | ரூ. | 40-00 |

மணமகன் தேவை, மணமகள் தேவை, சுவீகாரம் போன்ற விளம்பரங்கள் பாதிக் கட்டணத்தில் வெளியிடப்பெறும்.

தொடர்ந்து 12 மாதங்களுக்கு மேல் வெளியிடப் பெறும் விளம்பரங்களுக்குக் கட்டணத்தில் சலுகை உண்டு.

மணிவிழா, திருமணச் செய்திகள் ஒளிப்படத்துடன் வெளியிட (அரைப் பக்கம்) கட்டணம் ரூ. 50-00

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | ரூ. | 24-00 |
| டெபாசிட் சந்தா | ரூ. | 200-00 |

ஓர் ஆண்டுக்குக் குறைவான சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. சந்தாத் தொகையை M. O. மூலமும் பாங்க் டிராப்ட் மூலமும் அனுப்புபவர்கள் முழு முகவரியுடன் சென்ற ஆண்டு தொகை செலுத்தியதற்கான இரசீதின் எண்ணை அவசியம் குறிப்பிட வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு :

**"நகரத்தார் குரல்"**

25 வடக்குச் சித்திரை வீதி,

மதுரை-625 001.

Regd. No. TN/MA/(C)/106 NAGARATHAR KURAL